






# அத்தியாயம் 6

## இறைக் கொள்கையும் அரச நிதியும்

### 6.1 பொதுநோக்கு

**பொ இறைக்கொள்கை உபாயமானது 2006இல் இறைத்திரட்சியினை வலுப்படுத்துவதன் மீது தொடர்ந்தும் கவனம் செலுத்திய அதேவேளையில் சுனாமி மீட்சி செயற்பாடுகளிலும், வறுமையினையும் பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் குறைப்பதற்கான அரசாங்கத்தின் வறுமை சார்ந்த மற்றும் வளர்ச்சி சார்ந்த அபிவிருத்தி உபாயங்களிலும் தொடர்ந்தும் கவனம் செலுத்தியது.**
இறைக்கொள்கை உபாயமானது 'மகிந்த சிந்தனை' கொள்கை ஆவணத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்ட பொதுவான தொலை நோக்கிற்குள்ளும் பொதுவான பேரண்டப் பொருளாதார உபாயத்துடன் இசைந்து செல்லும் அடுத்த மூன்றாண்டுகளை உள்ளடக்கிய நடுத்தரகால பேரண்ட இறைக்கட்டமைப்பிற்குள்ளும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

்வ் உபாயமானது 2003ஆம் ஆண்டின் இறைமுகாமைத்துவ )பொறுப்பாண்மைச்) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளின் மூலம் ுழிநடத்தப்பட்டு வருகிறது. இறைக்கட்டமைப்பின் அடிப்படைப் ண்புகளாக மேம்பட்டுவரும் அரசிறை, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ீண்டெழும் செலவினம், அதிகரித்துவரும் அரசமுதலீடு, கிராமியப் ாருளாதாரத்திற்கு புத்துயிரளித்தல் மற்றும் உபாயம்மிக்க அரச தொழில் ுயற்சிகளின் நிதியியல் செயலாற்றத்தினை வலுப்படுத்தல் என்பன ாணப்பட்டன.

**006இல் இறை இலக்குகளை எய்துவது சவால்மிக்க பணியாக ாறியுள்ளது.** முக்கிய சவால்களாக உயர்ந்த பன்னாட்டு எண்ணெய் விலைகள், உயர்ந்த பணவீக்கம் உயர்ந்த உள்நாட்டு வட்டி வீதங்கள், அதிகரித்த பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு காரணமாக ஏற்பட்ட செலவினத்தினை ஈடுசெய்யும், தேவை என்பன காணப்பட்டன. முழு இறைத் தொழிற்பாடுகளையும் மேம்படுத்துவதற்காக வரி மற்றும் தீர்ப்பனவு முறைகளை சீர்திருத்துவது, வரி நிருவாகத்தினை வலுப்படுத்துதல், 006 யூலையிலிருந்து தொடக்கம் பெற்றோலிய உற்பத்தி விலை மாற்றங்களை முழுமையாகச் சுமத்துவதனை அனுமதிக்கின்ற விதத்தில் நிருவகிக்கப்பட்ட விலைகளைத் திருத்துதல் மற்றும் கிடைக்கத்தக்க வெளிநாட்டு மூலவளங்களின் பயன்பாட்டினை மேம்படுத்தல் என்பன உட்பட தொடர்ச்சியாக பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**அத்தகைய கடுமையான சவால்கள் காணப்பட்ட போதும், 2006இல் இறைச் செயலாற்றம் சில முன்னேற்றங்களை எடுத்துக் காட்டியது.** அரசின் அரசிறை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டிருந்ததுடன், குறிப்பாக வரிக் கொள்கை வழிமுறைகள், வரி நிருவாகம் மற்றும் உரிய நேரத்தில் இயற்றப்பட்ட தொடர்பான சட்டவாக்கங்கள் என்பனவற்றில் செய்யப்பட்ட வலுவான முயற்சிகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2005இன் 16.1 சதவீதத்திலிருந்து 17.0 சதவீதத்தினை அடைந்தது. 2006இல் சேகரிக்கப்பட்ட மொத்த அரசிறை ஆண்டு இலக்கினை விட சிறிதளவு மாத்திரமே குறைவாக இருந்தது. வரவு செலவுத்திட்ட இலக்கான 8.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் அரச முதலீடு 2005இனைப் போன்று 6.3 சதவீதத்தில் காணப்பட்டது. முதலீட்டின் முக்கிய துறைகளாக உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் சுனாமியுடன் தொடர்பான மீள்நிருமாணமும் காணப்பட்டன. மீண்டெழும் செலவினம் இலக்கினை விஞ்சியமைக்கு, சம்பளங்கள், கூலிகள், ஓய்வூதியம், எரிபொருள் உதவுதொகை, தேசிய பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நிவாரணம் என்பன மீதான செலவினம் வரவு செலவுத்திட்ட இலக்கினைவிட உயர்வாக இருந்தமையே காரணமாகும். ஆரம்ப இலக்கிடலுக்கெதிராக

வரைபடம் 6.1

முதன்மை இறைக் குறிகாட்டிகள்
(மொ.உ.உ. இன் சதவீதமாக)




மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை ஆரம்ப இலக்கான 9.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 8.4 சதவீதத்திற்கு குறைத்து முன்னேற்றமொன்றினை ஏற்படுத்தியது. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை வீழ்ச்சியடைந்த போதும் அரச முதலீட்டில் செய்யப்பட்ட வெட்டும், மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் நாட்டின் நீண்டகால வளர்ச்சி வாய்ப்புக்களை மோசமாகப் பாதித்தது. மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட மேலதிக அதிகரிப்பு மற்றும் அரசிறையில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சி என்பனவற்றிற்கு நிதியிடத் தேவையான மேலதிக கடன்பாட்டுத் தேவைகளை ஈடுசெய்வதற்கு அரசாங்கம் அதிகரித்த உள்நாட்டு நிதியிடல்களை நாடியது.

**மொ.உ.உற்பத்திக்கான வெளிநின்ற படுகடன் விகிதம் 2005இன் 93.9 சதவீதத்திலிருந்து 2006 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 93.0 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தமைக்கு பெயரளவு மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியிலான அதிகரிப்பே காரணமாகும்.** மொ.உ.உற்பத்திக்கான வெளிநின்ற படுகடன் விகிதம் பன்னாட்டு நியமங்களை விட உயர்வாக விளங்கியமையானது, இறை உறுதிப்பாட்டினை எய்துவதற்கு நடுத்தரகால பேரண்ட இறைக் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட நடுத்தரகால இறை இலக்குகளை கடுமையாகப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தின.

**அரசாங்கம் அதன் நீண்டகால கொள்கை உபாயத்தினை நடுத்தரகால பேரண்ட இறைக் கட்டமைப்பிற்கும் அப்பால் கொள்கைப் பணிப்புரையினை நீடிக்கின்ற பத்தாண்டு கால அபிவிருத்தி கட்டமைப்பில் (பத்து - ஆண்டு தொலைநோக்கு) தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.** பத்தாண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பின் பொதுவான குறிக்கோள் யாதெனில் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைக்கிடுவதன் மூலமாக வறுமையைக் குறைக்கும் விதத்தில் பிரதேச ஏற்றத்தாழ்வற்ற சமமான பொருளாதார வளர்ச்சியை எய்துவதேயாகும். எனினும், இறைத்துறையிலுள்ள வரி அமைப்பு, அரச தொழில் முயற்சிகள், ஓய்வூதிய முறை மற்றும் குடியியல் பணி என்பனவற்றில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளையும் சரியான நேரத்தில் சீர்செய்து கொள்வதன் மூலமே இம்முயற்சிகளை பூரணப்படுத்த வேண்டியிருக்கும்.

## 6.2 இறைக்கொள்கைப் போக்கும் வழிமுறைகளும்

**2006இல் பொதுவான இறைக் கொள்கை உபாயத்தின் முக்கிய கவனமானது இறைத்திரட்சியை வலுப்படுத்தல், சுனாமி மீட்சி செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளல், வறுமை மற்றும் பிரதேச வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான வறுமை சார்ந்த மற்றும் வளர்ச்சி சார்ந்த அபிவிருத்தி உபாயங்களை ஊக்குவித்தல் கிராமியப் பொருளாதாரத்திற்கு புத்துயிரளித்தல் அரச முதலீடுகளை அதிகரித்தல் மற்றும் உபாயம் மிக்க அரச தொழில் முயற்சிகளை வலுப் பெறச் செய்தல் என்பனவற்றின் மீது தொடர்ந்தும் காணப்பட்டது.** இறைத்திரட்சி செய்முறையினை மேலும் வலுப்படுத்துவதற்காக அரசிறையினை அதிகரிப்பதனையும் மீண்டெழும் செலவினத்தினை ஒழுங்கு முறைப்படுத்துவதனையும் இலக்காகக் கொண்ட வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன. சுனாமி மீட்சி செயற்பாடுகள் ஜீவனோபாயம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புக்களை பழைய நிலைக்கு கொண்டு வருவதன் மீது கவனத்தைச் செலுத்தின. கிராமிய பொருளாதாரத்திற்கு புத்துயிரளிப்பதனை இலக்காகக் கொண்ட வறுமை சார்ந்த மற்றும் வளர்ச்சி சார்ந்த கொள்கைகள் பல்வேறு பிரதேச, கிராமிய செயற்றிட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அறிமுகப் படுத்துவதனையும் தொடர்ந்து மேற்கொள்வதனையும் உள்ளடக்கியிருந்தன. அரச முதலீட்டுப் பக்கத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டு மூலவளங்களை அதிகளவில் பயன்படுத்தி செயற்றிட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்துவது பற்றி

வலியுறுத்தப்பட்டது. உபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மை உபாய அரச தொழில் முயற்சிகளின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கு தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது.

**2006இல் இறைத்திரட்சி செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்கு அரசின் அரசிறையில் காணப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு முக்கியமாகையால் இதனை வலுப்படுத்த உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட்டது.** இது தொடர்பாக வரித் தளத்தினை விரிவாக்குவதற்கும், வரி வீதங்களை திருத்துவதற்கும் வரி நிருவாகத்தினை நவீனப்படுத்துவதற்கும் மற்றும் வரி ஏய்ப்பினையும் வரித் தவிர்ப்பினையும் கட்டுப்படுத்துவதற்குமான சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கும் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. முக்கியமான வழிமுறைகள் பெறுமதி சேர் வரி அமைப்பினை மேலும் வலுப்படுத்தல், கம்பனி வருமான வரிகளையும் இறக்குமதித் தீர்வைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல், முத்திரைத் தீர்வையினை மீள அறிமுகப்படுத்தல் துறைமுகம் மற்றும் வானூர்தி அபிவிருத்தி தீர்வையினையும் குதிரைப் பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வைகளையும் அதிகரித்தல், சமூக பொறுப்பாண்மை தீர்வையின் திருத்தம், அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மீதான தீர்வை மற்றும் சிகரெட் மீதான கலால் வரி என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. வரி நிருவாகத்தினை நவீனமயப்படுத்தும் முயற்சிகள் மனிதவள அபிவிருத்திகளை மேற்கொள்வதன் மூலம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. வரி இணங்குவிப்புக்களை ஊக்குவிப்பதன் பொருட்டு வரி செலுத்துனர். சிநேக பூர்வ கலாச்சாரமொன்றினை உருவாக்குவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டன. நிச்சயமற்ற தன்மைகளைக் குறைப்பதற்காக அரசிறையுடன் தொடர்பான சட்டவாக்கங்கள் உரிய நேரத்தில் இயற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டது.

## அட்டவணை 6.1 அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

| விடயம் | 2005 | 2006 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 2006 தற்காலிக மானவை | 2007 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | |
| மொத்த அரசிறை | 379,746 | 484,376 | 477,334 | 599,817 |
| வரி அரசிறை | 336,829 | 435,292 | 428,378 | 540,929 |
| வரியல்லா அரசிறை | 42,917 | 49,084 | 48,956 | 58,888 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக்கழித்த கடன் வழங்கலும் | 584,783 | 731,641 | 713,147 | 898,000 |
| நடைமுறை | 443,550 | 509,856 | 547,460 | 596,165 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 141,434 | 221,785 | 165,686 | 301,836 |
| இதில் அரச முதலீடு | 148,582 | 225,295 | 177,443 | 303,567 |
| நடைமுறைக்கணக்கு மிகை(+) / குறை (-) | -63,604 | -25,480 | -70,126 | 3,652 |
| முதன்மைக்கணக்கு மிகை(+) / குறை (-) | -84,878 | -96,006 | -85,035 | -129,061 |
| முழுமொத்த மிகை (+) / குறை (-) | -205,037 | -247,267 | -235,813 | -298,183 |
| **மொத்த நிதியிடல்** | 205,037 | 247,267 | 235,813 | 298,183 |
| வெளிநாட்டு நிதியிடல் | 80,413 | 124,223 | 72,007 | 141,971 |
| வெளிநாட்டுக் கடன்கள் | 47,773 | 81,983 | 41,939 | 117,896 |
| வெளிநாட்டு கொடைகள் | 32,640 | 42,240 | 30,068 | 24,075 |
| உள்நாட்டு நிதியிடல் | 123,603 | 123,043 | 163,805 | 156,212 |
| சந்தை கடன்பாடுகள் | 119,303 | 123,043 | 163,805 | 156,212 |
| வங்கியல்லா | 93,108 | 123,043 | 83,797 | 139,512 |
| வங்கி | 26,195 | - | 80,008 | 16,700 |
| நாணய மேலாண்மை | -33,721 | - | 38,579 | - |
| வர்த்தக வங்கிகள் | 59,916 | - | 41,428 | - |
| ஏனைய கடன்பாடுகள் | 4,300 | - | - | - |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | 1,020 | - | - | - |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | |
| மொத்த அரசிறை | 16.1 | 17.8 | 17.0 | 18.5 |
| வரி அரசிறை | 14.2 | 16.0 | 15.3 | 16.7 |
| வரியல்லா அரசிறை | 1.8 | 1.8 | 1.7 | 1.8 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக்கழித்த கடன் வழங்கலும் | 24.7 | 26.9 | 25.4 | 27.7 |
| நடைமுறை | 18.7 | 18.7 | 19.5 | 18.4 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 6.0 | 8.2 | 5.9 | 9.3 |
| இதில் அரச முதலீடு | 6.3 | 8.3 | 6.3 | 9.4 |
| நடைமுறைக்கணக்கு மிகை(+) / குறை (-) | -2.7 | -0.9 | -2.5 | 0.1 |
| முதன்மைக்கணக்கு மிகை(+) / குறை (-) | -3.6 | -3.5 | -3.0 | -4.0 |
| முழுமொத்த மிகை (+) / குறை (-) | -8.7 | -9.1 | -8.4 | -9.2 |
| **மொத்த நிதியிடல்** | 8.7 | 9.1 | 8.4 | 9.2 |
| வெளிநாட்டு நிதியிடல் | 3.4 | 4.6 | 2.6 | 4.4 |
| வெளிநாட்டுக் கடன் | 2.0 | 3.0 | 1.5 | 3.6 |
| வெளிநாட்டு கொடைகள் | 1.4 | 1.6 | 1.1 | 0.7 |
| உள்நாட்டு நிதியிடல் | 5.2 | 4.5 | 5.8 | 4.8 |
| சந்தை கடன்பாடுகள் | 5.0 | 4.5 | 5.8 | 4.8 |
| வங்கியல்லா | 3.9 | 4.5 | 3.0 | 4.3 |
| வர்த்தக வங்கிகள் | 1.1 | - | 2.9 | 0.5 |
| நாணய மேலாண்மை | -1.4 | - | 1.4 | - |
| வங்கி | 2.5 | - | 1.5 | - |
| ஏனைய கடன்பாடுகள் | 0.2 | - | - | - |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | ... | - | - | - |

மூலம்: நிதி திட்டமிடல் அமைச்சு

**பெறுமதி சேர் வரி அமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு பல்வேறு மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** பெறுமதி சேர் வரி மீளளிப்பதனை ஒழுங்கமைக்கின்ற அதேவேளையில் கொடுப்பனவுத் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக மத்திய வங்கியில் சிறப்புக் கணக்கொன்று திறக்கப்பட்டமை, நிதியியல் துறை மீதான பெறுமதி சேர் வரி 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை, இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் பெறுமதி சேர் வரியின் மீது பிரயோகிக்கத்தக்க அளவுப் பெறுமதி 2006 சனவரியில் 5 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கும் 2006 நவெம்பரில் 10 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டமை, உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மென்பானங்கள் மீது பொருந்தத்தக்க பெறுமதி சேர் வரி குறைக்கப்பட்டதுடன் சில விடயங்கள் பெறுமதி சேர் வரியிலிருந்தும் விலக்கப்பட்டமை என்பன இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முக்கிய வழிமுறைகளாக இருந்தன. பெறுமதி சேர் வரி மீளளிப்புக்களில் மோசடி நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் வங்கி உத்தரவாத ஏற்பாடொன்று அவசியப்படுத்தப்பட்ட வேளையில் 20 சதவீத பெறுமதி சேர் வரிப் பிரிவிலுள்ள பொருட்களுக்கான மீளளிப்பின் மீது பொருந்தத்தக்க வரையறை 15 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது.

**கம்பனி வருமான வரிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய வழிமுறைகள்** கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் மீதான வரி வீதத்தில் குறைப்பு, வரி விதிக்கத்தக்க வருமானம் ரூ.5 மில்லியனை விஞ்சிய கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான வீதத்தில் அதிகரிப்பு, சூதாட்டம் மற்றும் தன்னியக்க லொத்தர்கள் வியாபாரத்திலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் இலாபங்களுக்கு ஏற்புடைத்தான வரி வீதம் 40 சதவீதத்திலும் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்திகளுக்கான ஊக்குவிப்பொன்றாக புதிய விலைக்குறிப்பீட்டு கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான வீதத்தினை 33 1/3 சதவீதத்திலும் நிர்ணயித்தமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. அதேவேளை ஆகக்கூடிய தனியாள் வருமான வரி வீதம் 35 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதன் மூலம் ரூ.500,000 கொண்ட புதிய வரிப் பிரிவுவொன்று 30 சதவீத வரி வீதத்திற்காக உருவாக்கப்பட்டது. வேளாண்மை உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக அத்தகைய ஏற்றுமதிகளிலிருந்தான வருமானத்தின் மீதான 15 சதவீத வரி அகற்றப்பட்டது. பழங்கள் மற்றும் காய்கறிளைப் பதனிடுவதனை மேம்படுத்துவதற்காக முதலாந்தர வேளாண்மைக்கும் உற்பத்திகளிலிருந்தான இலாபங்களுக்கும் வருமான வரியிலிருந்தும்

விலக்களிக்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் தொழில்சார் பணிகள் வழங்குவோர் விரைவாக தோற்றம் பெறுவதனை ஊக்குவிப்பதற்காக வெளிநாட்டு நாணயத்திற்காக இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியிலோ உள்ள இலங்கை தொழில்சார் நிபுணர்களினால் வழங்கப்படும் தொழில்சார் பணிகளும் வருமான வரியிலிருந்து விலக்கப்பட்டன.

**பல்வேறு வழிமுறைகளினூடாக இறக்குமதித் தீர்வைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.** இதன்படி, தெரிந்தெடுக்கப்ப்ட்ட இறக்குமதி விடயங்களில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்குடன் அத்தகைய விடயங்களின் இறக்குமதித் தீர்வை வீதங்கள் திருத்தப்பட்டதுடன் சில விடயங்கள் இறக்குமதித் தீர்வையிலிருந்தும் விலக்கப்பட்டன. பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் கீழ் வர்த்தகம் மற்றும் தீர்வைக் கொத்தணியினால் விதந்துரைக்கப்பட்டவாறு தீர்வை வீதங்களிலுள்ள முரண்பாடுகளை அகற்றுவதற்காக புதிய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பெறுமதியைக் குறைத்து மதிப்பிடுவதனை கட்டுப்படுத்துவதற்காக குறிப்பிட்ட பண்டங்களின் மீது குறித்துரைக்கப்பட்ட தீர்வைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆண்டின் இறுதிப்பகுதியில், வாழ்க்கைச் செலவினைக் குறைக்கும் நோக்குடன், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு தெரிந்தெடுக்கப்பட்ட அத்தியாவசிய உணவு விடயங்கள் மீதான தீர்வைகள் அகற்றப்பட்டன அல்லது குறைக்கப்பட்டன. இம்முயற்சிகளுக்கு உதவும் பொருட்டு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை மதிப்பிடுவதற்கு இலங்கைச் சுங்கத்தினால் மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறைகள் பிரயோகிக்கப்பட்டதுடன் சுங்க கண்காணிப்பு பொறிமுறையினை மேம்படுத்துவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைச் சுங்கமும் அதன் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்றினை மேற்கொண்டது.

**2006இல் வரி நிருவாகத்தினை நவீனமயப்படுத்தும் முயற்சிகள் பல்வேறு வழிகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.** உள்நாட்டு இறைத் திணைக்களத்தின் கம்பனி அமைப்பு முறையானது வரி நிருவாகத்தினை மேம்படுத்தவதற்காக மூத்த முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்கும், கணக்காய்வு மற்றும் கண்காணிப்பினை அபிவிருத்தி செய்வதற்கும், கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும் மனித வளங்களை அபிவருத்தி செய்வதற்காகவும் மீளமைக்கப்பட்டது. வரிக் கூற்றுக்களைக் கையாள்வதற்கான கால வரையறையின் திருத்தம், மனுக்கள் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்கிடையில் அவை கிடைத்தமை பற்றி அறிவித்தல், வரிகளை முன் கூட்டியே செலுத்திய வரி செலுத்துவோர்க்கு கழிவொன்றினை வழங்குதல், காலங்கடந்த கொடுப்பனவுகளின் மீது தண்டமொன்றினை விதித்தல் என்பனவும் வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டன.

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒரு கடன் மூலம் நிதியிடப்பட்ட இறை முகாமைத்துவ சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் 2006 இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.** சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட முக்கிய துறைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளூடாக மனித வளத்தினை அபிவிருத்தி செய்தல், வரி செலுத்துனர் சிநேகபூர்வ கலாச்சாரத்தினை உருவாக்கி பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல், நிறுவன அமைப்பியல் முறைகளை மீளமைப்பதனூடாக நிறுவன ரீதியான தன்மைகளை அபிவிருத்தி செய்தல், தகவல் தொழில்நுட்ப வசதிகளையும், கணக்காய்வு முறைகளையும் மேம்படுத்துதல் என்பனவற்றை உள்ளக்கியிருந்தன.

**மீண்டெழும் செலவினத்தினை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளையும் அறிமுகப்படுத்தியது.** எண்ணெய் மீதான உதவு தொகைச் செலவினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2006 ஏப்பிறலிலும் மேயிலும் பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட எண்ணெய் விலை உயர்வுகளுக்கு இசைவாக உள்நாட்டு பெற்றோலிய விலைகள் சீராக்கப்பட்டன. மேலும், 2006 யூலையில் அரசாங்கம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை இந்திய எண்ணெய் கம்பனி என்பன பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகளை நிர்ணயிப்பதற்கு அனுமதித்ததுடன் பெற்றோல் மற்றும் டீசல் மீதான எரிபொருள் உதவு தொகைகளுக்கான ஒதுக்குகளும் நிறுத்தப்பட்டது. இது இறை பாதிப்பினைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாக இருந்தது. வளமாக்கி உதவுதொகையானது சிறிய அளவு குறைந்தவருமான வேளாண்மையாளர்களை இலக்காகக் கொண்டு திருத்தப்பட்டது. இப் புதிய திட்டத்தின் கீழ், அனைத்து நெற் செய்கையாளர்களும் ஏனைய களப்பயிர்கள் பயிரிடுவோரும் 50 கி.கிறாம் யூரியா, முக்கூட்டு சிறப்பு பொசுப்பேட் மற்றும் பொட்டாசியம் மூறியேட் பொதியொன்றினை ரூ.350 இற்கு பெறுவர். இத்திட்டமானது சிறு உடமையாளர் பெருந்தோட்டத்துறைக்கும் உதவு தொகை வீதத்தில் யூரியாவினை வழங்கும் விதத்தில் மேலும் விரிவாக்கப்பட்டது. ஏனைய வழிமுறைகளாக கடுமையான பதிவு எண்ணிக்கை மதிப்பீடுகளைப் பின்பற்ற வேண்டுமென்ற அறிவுறுத்தல்கள், ஒப்புதல் பெறவேண்டிய நடைமுறைகள், வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னர் ஒதுக்கங்களின் வரவு செலவுத்திட்டக் கிடைப்பனவுகளைச் சரிபார்த்தல் மற்றும் அரச ஊழியர்களின் கடன்களையும் முற்பணங்களையும் வங்கித்தொழில் முறைக்கு மாற்றல் செய்வதனூடாக காசு முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**படுகடன் முகாமைத்துவ பக்கத்தில், அரச பிணையங்களை பன்முகப்படுத்துவதற்கும் பரந்தளவில் விரிவாக்குவதற்கும், முதனிலை வணிகர்கள் முறையினை வலுப்படுத்துவற்கும், சந்தைப்படுத்த முடியாத படுகடன் கருவிகளை கட்டம் கட்டமாக அகற்றும் வேளையில் உள்நாட்டு வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தகக் கடன்பாடுகளை மீண்டும் அதிகரிப்பதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** தளத்தினை விரிவாக்குதல் மற்றும் சந்தைப் போட்டித்தன்மையினை அதிகரித்தல் ஆகியனவற்றின் பொருட்டு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிச் சந்தை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் திறந்துவிடப்பட்டது. இதன்படி, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளிநிற்கின்ற திறைசேரி முறிகளின் தொகையில் 5 சதவீதம் வரையான அளவிற்கு முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டனர். மேலும், அதிகரித்து செல்லும் இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாப்பளிக்கும் விதத்தில் முதனிலை வணிகர்களுக்கு ஏற்புடைத்தான ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடு ரூ.250 மில்லியனிலிருந்து ரூ. 300 மில்லியனுக்கு மேலும் உயர்த்தப்பட்டது. முதனிலை வணிகர்களின் இடர்நேர்வுகளை உள்ளடக்கும் விதத்தில், போதுமான மூலதன மட்டங்களைப் பேணும் பொருட்டு இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மைக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. ரூபாப் பிணைகளை கட்டம் கட்டமாகத் தீர்ப்பனவு செய்யும் அதன் கொள்கையினைத் தொடர்ந்தது. இது தொடர்ப்பில் 2006 இல் முதிர்ச்சியடைந்த வர்த்தக வங்கிகளின் மீளமைப்புப் பிணையங்கள் திறைசேரி முறிகளின் மூலம் அகற்றப்பட்டன. உயர்வடைந்து செல்லும் உள்நாட்டு வட்டி வீதங்களுக்கு உள்நாட்டுப் படுகடனின் உயர் வெளிப்படுத்துகைகளை பன்முகப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் உள்நாட்டு, வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக கடன்பாடுகளைக் கூடியளவிற்கு நாடியது.

**சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், மீள்கட்டுமானத்தையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் விரைவுபடுத்துவதற்காக அனைத்து சுனாமி மீள்கட்டுமானங்களுடனும் தொடர்பான அமைப்புக்களைக் கூட்டியணைத்ததன் மூலம் 2005இல் நிறுவப்பட்ட முகவராண்மையான மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி முகவரின் கீழ் இவ்வாண்டும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.** வீடுகளை மீள அமைத்தல் மற்றும் வீட்டுச் சொந்தக்காரர்களால் உந்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்பதில் முகவர் முக்கிய பங்கை வகித்தது. ஜீவனோபாயத்தை மீள ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களும் மீள் நிர்மாண மற்றும் அபிவிருத்தி முகவரால் ஒருங்கிணைக்கப்பட்டது. கல்வி, நலம், வீதி

மற்றும் பாலங்கள், நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு, வலு வழங்கல், துறை முகங்கள், அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல்கள் என்பன உரிய அமைச்சுகளாலும், திணைக்களங்களாலும் கையாளப்பட்டன.

**வறுமை சார்ந்த மற்றும் வளர்ச்சி சார்ந்த அரசின் குறிக்கோள்களை எய்தும் பொருட்டும் கிராமியப் பொருளாதாரத்திற்கு புத்துயிரளிப்பதற்குமாக சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், வறியோருக்காக தொழில் வாய்ப்புக்களையும் வருமான உருவாக்கச் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்துவது. அபிவிருத்தியில் பிரதேச சமநிலையற்ற தன்மையினை மிகக் குறைப்பது என்பனவற்றின் மீது கவனம் செலுத்தும் வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** இதன்படி, பொருளாதார சமூக முன்னேற்றங்களை விரைவுபடுத்துவதற்காக, பொருளாதார ரீதியில் வசதி குறைந்த பிரிவினரின் இடைவெளியினைக் குறைப்பதற்காக தொடர்ச்சியான செயற்றிட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்களவு தொகையான மூலவளங்கள் செலவிடப்பட்டன. இதன் மூலம் வறுமை உறுதியானதொரு வீதத்தில் குறைவடையும். இதற்கு இசைவாக வீதிகள், மின்வலு, நீர்ப்பாசனம் மற்றும் நீர், வீடமைப்பு மற்றும் ஜீவனோபாயம் ஆகிய ஐந்து முக்கிய துறைகளின் மீது பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சனசமூகங்களுக்கான நீர் வழங்கல் அபிவிருத்தி, கிராமிய வீதிகளைத் தரமுயர்த்துவது, கிராமங்களுக்கான மின்னூட்டல், கிராமிய நீர்ப்பாசன வசதிகளின் அபிவிருத்தி வறிய கிராம மக்களுக்கான வீடமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடு, சிறப்பு பிரதேசங்கள் மற்றும் சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் என்பன இச்செயற்றிட்டங்களின் முக்கிய பகுதிகளாக விளங்கின. மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை புத்தாக்கம் செய்து மீள்கட்டுமானப்படுத்துவதனூடாக மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பவும், மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் ஜீவனோபாயத்திற்கும் ஆதரவு வழங்குவதற்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. சமுர்த்தி நன்மை பெறுநர்களுக்கான சமூக பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக கிராமிய வறிய மக்களுக்கு வலுவளிப்பதற்கும் முயற்சிக்கப்பட்டது. மேலும், மிக வறிய மக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக 119 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள வறிய மக்களுக்கு அதிகரித்தளவில் மூலவளங்கள் வழிப்படுத்தப்பட்டன. வறிய பிரிவினருக்கான பொருளாதார வாய்ப்புக்களை அவர்களது தொழில் முயற்சியாண்மைகளை ஊக்குவிப்பதனூடாக உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

**குறிப்பாக நாட்டின் வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு முட்டுக்கட்டையாக விளங்கும் உட்கட்டமைப்பு தடைகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் அனைத்தையுமுள்ளடக்கிய அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றினைச் சமர்ப்பித்துள்ளது.** ஆண்டுக்காலத்தில்,

**வரைபடம் 6.2** **அரசின் அரசிறை உள்ளடக்கம் ஏனையவை**




கிடைக்கத்தக்க வெளிநாட்டு மூலவளங்களை அதிகரித்தளவில் பயன்படுத்தி செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல்களை விரைவுபடுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இதற்கமைவாக, கொள்வனவிலுள்ள தாமதங்களைக் குறைப்பதற்கும் நிதிகளின் அனுப்பல்களை விரைவுபடுத்துவதற்கும் தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முக்கியமாக முதலீட்டுத்துறைகள், வலு, வீதிகள், வானூர்தி நிலையங்கள், தொடர்பூட்டல், நீர்வழங்கல், சாக்கடை வடிகால் மற்றும் வீடமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தொழில் முயற்சிகள் தொடர்ந்தும் அரச உடமையாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை அரசாங்கம் அங்கீகரிக்கின்றதனால் உபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையினூடாக அரச தொழில் முயற்சிகளின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கு 2006இலும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** இவ்வாண்டுப் பகுதியில் சனாதிபதியின் பணிப்பிற்கேற்ப உபாய தொழில் முயற்சிகள், முகாமைத்துவ முகவராண்மையின் செயற்பரப்பு விரிவாக்கப்பட்டதுடன் இதன் கீழ் 8 புதிய உபாய தொழில் முயற்சிகள்[1] உபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மைகளின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், உபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மை தொடர்ந்தும் சுதந்திரமாக தொழிற்படுதவற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றிருக்கிறது. 2006 இல், உபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் கீழ் உள்ள தொழில் முயற்சிகள் வங்கித்தொழில், போக்குவரத்தும் மற்றும் ஏற்பாடுகள் பெருந்தோட்டங்கள், வர்த்தகம் மற்றும் பொதுவசதிகள் பயன்பாட்டு கொத்தணிகள்[2] ஆகிய ஐந்து கொத்தணிகளாக தொகுதிப் படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு தொழில் முயற்சியும் அவற்றிற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி பல்நோக்கு அரசிறை மூலங்களை உருவாக்குவதற்காக உபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையினால் வழிமுறைகள் தொடங்கப்பட்டன. புதிய வருமான மூலங்களைக் கண்டறிந்து கொள்வதன் மூலம் அரசின் வரியல்லா அரசிறைக்கான பகிர்ந்தளிப்பினை அதிகரிப்பதற்காக அனைத்து உபாய தொழில் முயற்சிகளுக்குமான புதிய வியாபார மாதிரிகள் தயாரிக்கப்பட்டன.

**அரசாங்கத்தின் நிதியியல் தொழிற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் 2006இல் நிதி, திட்டமிடல் அமைச்சு பல்வேறு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.** இதன்படி, நாட்டிற்கான இறைக்கொள்கைக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கும் இறைச் செயலாற்றத்தினைக் கண்காணிப்பதற்கும் நிலையான செயல்முறைகளினூடாக வரவு

1. **புதிய** 8 தொழில் முயற்சிகளும் லங்கா புத்திர வங்கி, மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை. இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட சிலாபம் பிலான்டேசன், வரையறுக்கப்பட்ட எக்கடுவ பிளான்டேசன், மற்றும் வரையறுக்கப்பட்ட குருநாகல் பிளான்டேசன் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இந் நடவடிக்கைகளுடன் உபாய தொழில் முயற்சி முகாமைத்துவ முகவராண்மையின் கீழ் உள்ள தொழில் முயற்சிகளின் மொத்த எண்ணிக்கை 20 இற்கு அதிகரித்தது.

2. வங்கித் தொழில் கொத்தணி மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி மற்றும் லங்கா புத்திர வங்கி என்பவற்றை உள்ளடக்குகிறது. பெருந்தோட்டக் கொத்தணியானது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், குருநாகல் பிளான்டேசன், சிலாபம் பிளான்டேசன், எல்கடுவ பிளான்டேசன், மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம், தேசிய விலங்குகள் அபிவிருத்திச்சபை என்பவற்றை உள்ளடக்குகிறது. போக்குவரத்து மற்றும் உதவி ஏற்பாடுகள் கொத்தணி இலங்கைப் போக்குவரத்துச்சபை, இலங்கைப் புகைவண்டி, இலங்கைத் துறைமுக அதிகாரசபை, மற்றும் வானூர்தி நிலைய வான்போக்குவரத்து அதிகாரசபை என்பனவற்றை உள்ளடக்குகிறது. வர்த்தகப்படுத்தல் கொத்தணி அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தினை உள்ளடக்குகிறது. பொது வசதிகள் கொத்தணி இலங்கை மின்சபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**அட்டவணை 6.2 அரசிறையின் பொருளாதாரப் பகுப்பாய்வு**

| | 2005 | 2006 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 2006 தற்காலிக மானவை | 2007 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | |
| **வரி அரசிறை** | **336,829** | **435,292** | **428,378** | **540,929** |
| வருமான வரிகள் | 52,535 | 75,560 | 80,483 | 102,124 |
| பெ.கூ.வ | 138,660 | 174,295 | 164,555 | 202,272 |
| கலால் தீர்வை | 76,978 | 85,363 | 92,845 | 107,580 |
| இறக்குமதித் தீர்வை | 45,391 | 64,596 | 52,681 | 70,530 |
| ஏனைய வரிகள் | 23,265 | 35,478 | 37,814 | 58,423 |
| **வரியல்லா அரசிறை** | **42,917** | **49,084** | **48,956** | **58,888** |
| **மொத்த அரசிறை** | **379,746** | **484,376** | **477,334** | **599,817** |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | |
| வருமான வரிகள் | **14.2** | **16.0** | **15.3** | **16.7** |
| வருமான வரிகள் | 2.2 | 2.8 | 2.9 | 3.2 |
| பெ.கூ.வ | 5.9 | 6.4 | 5.9 | 6.2 |
| கலால் தீர்வை | 3.3 | 3.1 | 3.3 | 3.3 |
| இறக்குமதித் தீர்வை | 1.9 | 2.4 | 1.9 | 2.2 |
| ஏனைய வரிகள் | 1.0 | 1.3 | 1.3 | 1.8 |
| **வரியல்லா அரசிறை** | **1.8** | **1.8** | **1.7** | **1.8** |
| **மொத்த அரசிறை** | **16.1** | **17.8** | **17.0** | **18.5** |

மூலம்: நிதி திட்டமிடல் அமைச்சு

செலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதில் ஒழுக்காற்றுக்களை உறுதிப்படுத்துவதற்குமாக நிதித் திட்டமிடல் அமைச்சில் இறைக்கொள்கைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. மேலும், அரசாங்கத்தின் கடன் வழங்கல் நடவடிக்கைகளின் பகிர்ந்தளிப்பு மற்றும் அளவிடல் என்பனவற்றிற்கு கண்காணிப்பு பொறிமுறையொன்றினை வழங்குவதற்காக அரசாங்க சொத்து முகாமைத்துவ முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அரசாங்க நிதியின் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக திறைசேரித் தொழிற்பாடுகளின் மீது புதுக்கியமைக்கப்பட்ட தனியொரு கணக்கீட்டு முறையினை அறிமுகப்படுத்துவதற்கான இறுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 6.3 அரச வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

### அரசிறை

**2006இல் மொத்த அரச அரசிறை 26 சதவீதத்தினால் ரூ.477 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் மொ.உ.உற்பத்திக்கான மொத்த அரசிறை விகிதம் தொடர்ந்தும் அதிகரித்த போக்கினைக் கொண்டிருந்ததுடன் 2005இன் 16.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 17.0 சதவீதத்தினை அடைந்தது.** மொத்த அரசிறையானது திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் இலக்கான ரூ.484 பில்லியனை விட சிறிதளவு மாத்திரமே குறைவாக இருந்தது. மேம்பட்ட செயலாற்றத்திற்கு வரி மற்றும் வரியல்லா அரசிறை இரண்டிலுமிருந்து அரசிறைக்கு ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும்.

**வரி அரசிறை ரூ.428.4 பில்லியனுக்கு 27 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் மொ.உ.உற்பத்திக்கான வரி அரசிறை விகிதம் மூன்றாவதாண்டாக 2005இன் 14.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 15.3 சதவீதமாக விளங்கியது.** வரி அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக வருமான வரிகள் பெறுமதி சேர் வரிகள், கலால் வரிகள் மற்றும் இறக்குமதித் தீர்வைகள் என்பனவற்றிலிருந்து அரசிறைக்கு ஏற்பட்ட அதிகரிப்புகளின் மூலமே பெறப்பட்டது. கம்பனி மற்றும் தனியாள் வருமான வரி இரண்டிற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள், முன்கொண்டு செல்லப்பட்ட இழப்புக்களின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், வரிச் சட்டவாக்கங்களுக்கு கொண்டு வரப்பட்ட திருத்தங்களின் மூலம்

**வரைபடம் 6.3 அரச நடைமுறைச் செலவினம் உள்ளமைப்பு**




சட்டத்திலுள்ள துவாரங்கள் அடைக்கப்பட்டமை, பொருளாதார பணிக் கட்டணத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள் மற்றும் மேம்பட்ட வரி நிருவாகம் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பன வருமான வரிகளிலிருந்தான அதிகரித்த அரசிறைக்கு பங்களித்தன. பெறுமதி சேர் வரியிலிருந்தான அரசிறை அதிகரித்தமைக்கு இறக்குமதி மீதான பெறுமதியிடலில் ஏற்பட்ட அதிகரிப்பு, நிதியியல் பணிகள் மீதான வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, உந்து ஊர்திகள் போன்ற உயர் பெறுமதி கொண்ட பொருட்களின் அதிகரித்த இறக்குமதிகள் உயர்ந்த பன்னாட்டு பண்ட விலைகள், பணிகள் துறையின் குறிப்பாக தொலைத் தொடர்பூட்டல் துணைத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் பெறுமதி சேர்வரி மீளமைப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் என்பன காரணங்களாயமைந்தன. கலால் தீர்வையிலிருந்தான அரசிறை அதிகரித்தமைக்கு சிகரட் மற்றும் குடிவகை உற்பத்திகளின் விற்பனை அதிகரித்தமையும் வீதங்களில் செய்யப்பட்ட அதிகரிப்புக்களுமே முக்கிய காரணங்களாகும். அதிகரித்த இறக்குமதித் தீர்வைகளுக்கு அதிகரித்த உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மற்றும் இலங்கைச் சுங்கத்தின் தீவிரப்படுத்தப்பட்ட எதிர் வழிமுறைகள், மேம்பட்ட கண்காணிப்பு மதிப்பீட்டு முறைகள் என்பன காரணங்களாயமைந்தன.

**வரியல்லா அரசிறை ரூ. 49 பில்லியனுக்கு 14.0 சதவீதத்தினால் அதிகரித்த போதும் மொ.உ.உற்பத்தியின் விகிதமாக இது, 2005இன் 1.8 சதவீதத்திலிருந்து 2006இல் 1.7 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** இது விற்பனை மற்றும் விதிப்புக்கள், தண்டப்பணங்கள் மற்றும் குற்றப்பணங்கள், அரச தொழில் முயற்சிகளிலிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாபம், அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் என்பனவற்றிலிருந்து முக்கியமாக பெறப்பட்டது.

### செலவினம்

**2006இல் மொத்த செலவினமும் அரசாங்கத்தின் தேறிய கடன் வழங்கலும் ரூ.713 பில்லியன்களை அடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.** 2006இற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொத்தச் செலவினமான 731.6 பில்லியனை விட குறைவானதாகக் காணப்பட்டது. சம்பளங்கள் மற்றும் கூலிகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள், உதவு தொகைகள் மற்றும் மாற்றல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வட்டியல்லா மீண்டெழும் செலவினத்தின் மீது ஏற்பட்ட செலவு வரவு செலவுத்திட்ட செலவினத்திலும் பார்க்க உயர்வாக இருந்தமையானது 2006இல் மொத்த மீண்டெழும் செலவினத்தில் கூடியளவு அதிகரிப்பினை ஏற்படுத்தியது. சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் ரூ.175 பில்லியனுக்கு 26.3

**வரைபடம் 6.4** தொழிற்பாட்டின்படி மொத்த செலவினம் 2006




சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2006இல் அரசதுறைச் சம்பங்களின் அதிகரிப்பு, முரண்பாடுகள் திருத்தப்பட்டமை, அரச ஊழியர்களுக்கு மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி அறிமுகப்படுத்தப்பட்டமை, மருத்துவ தாதிமார், எழுதுவினைஞர்கள், தொழில்நுட்ப அலுவலர் மற்றும் ஊர்காவல் படையினரின் புதிய ஆட்சேர்ப்பு, 40,000இற்கு மேற்பட்ட பட்டதாரிகள் அரச பணிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டமையின் முழுத்தாக்கம் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. மொத்த மீண்டெழும் செலவினத்தில் 32 சதவீதத்திற்கு வகை கூறிய தனியொரு உயர்ந்த செலவின விடயம் இதுவாகும். ஓய்வூதிய முரண்பாடுகள் திருத்தப்பட்டமை மற்றும் 2006இல் வழங்கப்பட்ட அதிகரிப்பு என்பன ஓய்வூதியக் கொடுப்பனவுகளை ரூ.58 பில்லியனுக்கு 24 சதவீதத்தினால் அதிகரித்தன. சில அரச கூட்டுத்தாபனங்களில் காணப்பட்ட வினைத்திறனின்மை, நிருவகிக்கப்பட்ட விலைகளில் போதுமான திருத்தங்கள் செய்யப்படாமை மற்றும் சம்பள அதிகரிப்பு என்பன அரச கூட்டுத்தாபனங்களினதும் நிறுவனங்களினதும் மீண்டெழும் செலவினம் 2005இன் ரூ.26.5 பில்லியனிலிருந்து 2006இல் ரூ.39 பில்லியனுக்கு அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. அதேவேளை, பெயரளவு நியதிகளில் வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது, உள்நாட்டு கடன் கொடுப்பனவுகள் 2005 உடன் ஒப்பிடுகையில் 18 சதவீதத்தால் 133.8 பில்லியனுக்கு அதிகரித்த அதே நேரம் வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 143 சதவீதத்தால் 17 பில்லியனுக்கு அதிகரித்தது. உள்நாட்டுப் படுகடனில் ஏற்பட்ட உயர்ந்த வட்டிக் கொடுப்பனவு மற்றும் 2005இல் வழங்கப்பட்ட படுகடன் இசைவுத் தாமதம் முடிவடைந்தமையினைத் தொடர்ந்து வெளிநாட்டுப் படுகடனின் மீதான வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன இவ்வதிகரிப்பிற்கு காரணங்களாகும். 2005இன் 5.1 சதவீதத்திலிருந்து 5.4 சதவீதத்திற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வட்டி கொடுப்பனவுகளும் அதிகரித்து இருந்தன.

**உயர் மீண்டெழும் செலவினத்தில் ஓர் சந்தர்ப்பச் செலவினமும் காணப்படுகின்றது.** இலக்குகளைக் காட்டிலும் மேலாக ஏற்பட்டுக்கொள்கின்ற மீண்டெழும் செலவினங்கள் எதிர்கால உயர் பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லக்கூடிய பொது முதலீடுகளுக்காக கிடைக்கத்தக்க வளங்களை இல்லாமல் செய்யும்.

**நாட்டின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பினை மேம்படுத்துகின்ற நோக்குடன் அரச முதலீடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.** செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் காரணமாக 2006இல் முதலீடு ரூ.177.4 பில்லியனுக்கு 19.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கான அதிகரித்த நிதி ஒதுக்கப்பட்டமை, மேம்பட்ட அரச அரசிறை மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் உயர்ந்தளவில் பயன்படுத்தப்பட்டமை என்பன அதிகரித்த அரச முதலீட்டிற்கு முக்கியமாகப் பங்களித்த காரணிகளாக விளங்கின. உட்கட்டமைப்பினுடைய மீள்கட்டமைப்பின் மீது ஏற்பட்ட செலவுகள் உள்ளடங்களாக 2006இன் மொத்த பொது முதலீடு சுனாமி அழிவின் காரணமாக பாதிப்புக்குள்ளது. மொ.உ.உற்பத்திக்கான சதவீதமாக அரச முதலீடு 2005இனைப் போன்றே 6.3 சதவீதமாக இருந்தது.

**பொருளாதாரப் பணிகள் அரச முதலீட்டின் முக்கிய துறையாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.** போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல், வலு மற்றும் நீர் வழங்கல் என்பன முன்னைய ஆண்டினைப் போன்றே

**அட்டவணை 6.3** செலவினத்தினது பொருளாதாரப் பகுப்பாய்வு

| | 2005 | 2006 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2006 தற்காலிக மானவை | 2007 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | |
| **நடைமுறைச் செலவினம்** | **443,350** | **509,856** | **547,460** | **596,165** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 194,860 | 241,419 | 253,026 | 299,324 |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 138,603 | 168,570 | 175,031 | 198,743 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 120,159 | 151,259 | 150,777 | 169,122 |
| வெளிநாட்டு | 6,995 | 19,053 | 16,990 | 21,149 |
| உள்நாட்டு | 113,164 | 132,206 | 133,787 | 147,973 |
| நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் | 128,331 | 117,238 | 143,658 | 127,719 |
| இதில் குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 101,277 | 83,420 | 104,34 | 294,450 |
| சமுர்த்தி | 9,161 | 12,200 | 10,789 | 9,600 |
| ஓய்வூதியங்கள் | 46,782 | 48,361 | 58,006 | 61,654 |
| பசளை உதவிக் கொடுப்பனவு | 6,846 | 8,500 | 11,867 | 10,000 |
| ஏனையவை | 38,488 | 14,359 | 23,680 | 13,196 |
| **மூலதனச் செலவினம்** | **140,154** | **211,740** | **162,214** | **259,642** |
| உண்மைச்சொத்துக்களின் கையேற்பு | 88,140 | 133,121 | 88,208 | 179,004 |
| மூலதன மாற்றல்கள் | 52,014 | 89,669 | 74,005 | 122,138 |
| குறைச் செலவினம் | - | -11,050 | - | -41,500 |
| **மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்** | 1,280 | 10,046 | 3,473 | 42,194 |
| **மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | 584,783 | 731,642 | 713,147 | 898,000 |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | |
| **நடைமுறைச் செலவினம்** | **18.7** | **18.7** | **19.5** | **18.4** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 8.2 | 8.9 | 9.0 | 9.2 |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 5.9 | 6.2 | 6.2 | 6.1 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 5.1 | 5.6 | 5.4 | 5.2 |
| வெளிநாட்டு | 0.3 | 0.7 | 0.6 | 0.7 |
| உள்நாட்டு | 4.8 | 4.9 | 4.8 | 4.6 |
| நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் | 5.4 | 4.3 | 5.1 | 3.9 |
| இதில் குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 4.3 | 3.1 | 3.7 | 2.9 |
| சமுர்த்தி | 0.4 | 0.4 | 0.4 | 0.3 |
| ஓய்வூதியங்கள் | 2.0 | 1.8 | 2.1 | 1.9 |
| பசளை உதவிக் கொடுப்பனவு | 0.3 | 0.3 | 0.4 | 0.3 |
| ஏனையவை | 1.6 | 0.5 | 0.8 | 0.4 |
| **மூலதனச் செலவினம்** | **5.9** | **7.8** | **5.8** | **8.0** |
| உண்மைச்சொத்துக்களின் கையேற்பு | 3.7 | 4.9 | 3.1 | 5.5 |
| மூலதன மாற்றல்கள் | 2.2 | 3.3 | 2.6 | 3.8 |
| குறைச் செலவினம் | - | -0.4 | - | -1.3 |
| **மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்** | 0.1 | **0.4** | **0.1** | **1.3** |
| **மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | 24.7 | 26.9 | 25.4 | 27.7 |

மூலம்: நிதி திட்டமிடல் அமைச்சு

**சிறப்புக் குறிப்பு 8**

## உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான அரச தனியார் கூட்டாண்மைகள்

அரசாங்கமானது 'பொது' பொருட்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு போன்ற பணிகளை வழங்குவதில் ஈடுபட்டு வருகின்றது. இது மிகப்பெரிய முன் மூலதனத்தை தேவைப்படுத்தும் மற்றும் அதிகமான வருகைக் காலத்தை ஏற்படுத்தும். குறிப்பாக, பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் சார்ந்த பொருட்கள் மற்றும் பணிகளை வழங்குவதிலும் ஈடுபடுகின்றது. அத்தகைய திட்டங்களுக்கு நிதியிடும் பொருட்டு அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி போன்ற வேறுபட்ட கடன் வழங்கும் முகவர்களிடமிருந்தும் ஏனைய இருபுடை மூலகங்களிலிருந்தும் இலங்கை அபிவிருத்தி முறிகள், கரை கடந்த வங்கித்தொழில் பிரிவுகளிடமிருந்தான கடன்கள் மற்றும் பன்னாட்டு மூலதனச் சந்தைகள் போன்ற வர்த்தக மூலங்களிலிருந்தும் வழக்கமாக கடன்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசாங்க உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியிடலுக்காக தற்போது நடைமுறையிலுள்ள தொடர்ச்சியான கடன்படுகைகளானது வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை விரிவடைவதற்கும் வெளிநின்ற அரச கடன்களின் அதிகரிப்பிற்கும் இட்டுச் சென்றுள்ளன. அத்தகைய திட்டங்கள் அரச துறையால் மாத்திரம் தனியாக நடைமுறைப்படுத்தப்படுமாயின் அவை வழக்கமான அரசதுறையின் கடுமையான நலிவுப் பாதிப்பிற்கு இட்டுச்செல்லும். எனவே உட்கட்டமைப்பு திட்டங்களை செயற்படுத்துவதற்கும் மற்றும் நிதியிடுவதற்கும் மாற்று தந்திரோபாயம் ஒன்று தேவைப்படுகிறது.

ஒரு தனியார் அரசக் கூட்டாண்மையில், உள்நாட்டையோ அல்லது வெளிநாட்டையோ சேர்ந்த தனியார்துறை முதலீட்டாளர்கள் அபிவிருத்தித் திட்டங்களை கையேற்பதற்காக ஓர் கூட்டாண்மை ஒழுங்கமைத்தல் ஊடாக அரசாங்கத்துடன் கைகோற்பார்கள். அரசாங்கமானது நிலத்தில் முதலீடு செய்வதன் மூலமும் உரிமங்களை வழங்குதல், பாதுகாத்தல் மற்றும் அரசிறைமையின் உத்தரவாதங்கள், நிதியைத் திரட்டும் செயற்பாடுகளுக்கு உதவுதல் மற்றும் சாத்தியமான சூழல் ஒன்றை உருவாக்குதல் போன்றவற்றை ஒழுங்கமைத்தல் மூலமும் பங்களிக்க முடியும். தனியார் துறையானது பகுதியளவிலான நிதியிடல் மற்றும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி தொழிற்படுத்துகின்றமையைப் பொறுப்பேற்க முடியும்.

அபிவிருத்தியடைந்து வருகின்றதும் தோற்றம் பெற்றுவருகின்றதுமான பொருளாதாரங்களில் தனியார் அரச கூட்டாண்மையானது உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் நிதியிடலில் பிரபல்யம் பெற்ற முறையொன்றாக மாறிவருகின்றது. அரச தனியார் உட்கட்டமைப்பு ஆலோசனை வசதியின்படி 1990 -2004 காலப்பகுதியில் , தனியார் அரச கூட்டாண்மைகளின் முன்னணிப் பிராந்தியங்களான லத்தீன் அமெரிக்கா மற்றும் கிழக்கு ஆசியாவின் முதலீட்டாளர்களின் முறையே 400 பில்லியன் ஐ.அ. டொலர்களாகவும் 200 பில்லியன் ஐ.அ.டொலர்களாகவும் காணப்பட்ட முதலீட்டுக் கடப்பாட்டுடன் ஒப்பிடுகையில் தென் ஆசியாவினால் தனியார் பங்குபற்றுதல்களுடன் 55.4 பில்லியன் ஐ.அ.டொலர் முதலீட்டுக் கடன்பாட்டுடன் 224 உட்கட்டமைப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தென் ஆசியாவின் செயற்பாட்டில் 76 சதவீதத்திற்கு இந்தியா வகை கூறுகிறது. ஆசிய நாடுகளில் காணப்படும் சில தனியார் பொது கூட்டாண்மை திட்டங்களை அட்டவணை சி 8.1 பட்டியலிடுகின்றது.

உத்தேச கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டமானது இலங்கையில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற தனியார் அரச கூட்டாண்மைக்கான அண்மைய உதாரணங்களில் ஒன்றாக காணப்படுகிறது. கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டத்தினுடைய பிரதான மூலங்களானது உள்வரும் கால்வாய் மற்றும் உட்துறைமுக நீர்த்தேக்கத்தை அகழ்தல் மற்றும் மூன்று புதிய துறைமுக மேடைகளுக்கு இடமளிக்கும் விதத்தில் நீர்பிரி மேடைகளை நிருமாணித்திருப்பது என்பன காணப்படுகின்றன. துறைமுக மேடையானது கட்டு, தொழிற்படுத்து, மாற்றல் செய் என்ற ஒப்பந்தத்தின் கீழ் திறந்த போட்டிக் கேள்வி கோரல் ஊடாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்பாட்டாளர்கள் மூலம் நிர்மாணிக்கப்படவிருக்கிறது. குடியியல்சார் வேலையானது இலங்கை துறைமுக அதிகார சபையூடாக அரசாங்கத்தால் செய்யப்படும். திட்டச் செலவானது மூன்று துறைமுக மேடைகளுடைய நிர்மாணம் உட்பட 1,406 மில்லியன் ஐ.அ.டொலர்களென மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு துறைமுக மேடையினுடைய நிர்மாணம் உள்ளடங்கலாக கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டத்தினுடைய ஆரம்ப கட்டத்தினுடைய மொத்த முதலீட்டுச் செலவு 781 மில்லியன் ஐ.அ.டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டத்தின் மொத்தச் செலவில் அரச துறையின் பகுதி 480 மில்லியன் ஐ.அ.டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவை, ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான 300 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மூலமும், மிகுதி இலங்கை அரசாங்கத்தினாலும் நிதியிடப்பட இருக்கின்றன. 301 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கூறிற்கு உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்ட தனியார்துறை முதலீட்டாளர்களை அடையாளம் காண வேண்டியுள்ளது.

மேலேயுள்ள உதாரணம், தனியார் அரச கூட்டாண்மைகளினூடாக நாட்டுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளை குறிப்பிட்டு காட்டுகிறது. இந்த முழுத்திட்டமும் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தினூடாக நிதியிடப்பட்டிருக்குமாயின், இது வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை விரிவுபடுத்தியிருப்பதுடன் அரசாங்க கடன்பாடுகள் மற்றும் வெளிநின்ற கடன்களை அதிகரித்து வரவு செலவுத்திட்ட முகாமைத்துவத்தில் நெருக்கடிகளை உருவாக்கியிருக்கும். அத்துடன் பணவீக்கத்தினையும் கடுமையாக பாதித்திருக்கும். தனியார் அரச கூட்டாண்மையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களானது பங்கிலாபங்கள் மற்றும் மூலதன பெறுகைகள் என்பவற்றின் மூலம் அரசாங்க வருமானத்திற்கான எதிர்கால மூலங்களாக காணப்படுகின்றன. திட்டங்களை முகாமை செய்வதற்கான தனியார் முதலீட்டாளர்களுக்குரிய ஒப்பீட்டு ரீதியிலான அநுகூலங்கள் வினைத்திறன், உற்பத்தித்திறன் மற்றும் உயர் தகைமை என்பவற்றை உயர்த்துவதற்கு வழியமைக்கும். சரியான முறைப்படி வடிவமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட அரச தனியார் கூட்டாண்மையானது பன்னாட்டு நிதியை பெறும் வழி வகைகளின் அணுகுதலை உயர்த்துகிறது. பணி விநியோகத்தில் போட்டித்தன்மையை அதிகரிக்கிறது. பல்வேறுபட்ட இடர்நேர்வுகளுடைய ஒன்றிணைப்பிற்கு இயலச் செய்கிறது. அத்துடன் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் ஊக்குவிக்கிறது.

**அட்டவணை சி 8.5**

**ஆசிய நாடுகளில் முக்கியமான அரச தனியார் கூட்டாண்மைத் திட்டங்கள்**

| நாடு | திட்டங்கள் |
|---|---|
| இந்தியா | • கேரளா நிலைத்து நிற்கக்கூடிய நகர அபிவிருத்தித்திட்டம்<br>• கர்நாடகா 18 தலைநகரங்கள் மற்றும் நகரங்கள் அபிவிருத்தித்திட்டம்<br>• நவசேவா பன்னாட்டு கொள்கலன் கப்பல் மேடை<br>• திருப்பூர் பிரதேச நீர்வழங்கல் மற்றும் சுகாதாரம், சென்னை |
| பாக்கித்தான் | • பலுசித்தான் கிராமிய அபிவிருத்தி மற்றும் வரட்சி தணிப்பு நிகழ்ச்சித்திட்டம்<br>• மலகன்ட் கிராமிய அபிவிருத்தித் திட்டம்<br>• பஞ்சாப் வளமுகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் |
| இந்தோனேசியா | • வாயு போக்குவரத்து திட்டம் |
| மலேசியா | • வடக்குத் தெற்கு வழி கட்டு, தொழிற்படுத்து, மாற்றல் செய் திட்டம்<br>• நிலைத்து நிற்கக் கூடிய முனைப்பு |

இவ்வகையின் முக்கிய துணைத்துறைகளாக காணப்பட்டன. வறுமைசார்ந்த, ஜீவனோபாயம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதற்கிசைவாக நிதிகளில் பெருந்தொகை கிராமிய உட்கட்டமைப்பின் அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்டது. மேலும், தென் பிராந்திய நெடுஞ்சாலைச் செயற்றிட்டம் மற்றும் பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய அபிவிருத்தி செயற்றிட்டம் போன்ற பாரிய செயற்றிட்டங்களும் செயற்பாட்டிலுள்ள முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களுள் அடங்குகின்றன.

**கல்வி மற்றும் சுகாதார துறைகள் மீதான வலியுறுத்தல்களுடன் பொதுவான மனிதவள அபிவிருத்தி மீதான அரசின் உயர்ந்த முன்னுரிமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சமூக பணிகளில் அரசின் முதலீடு அதிகரித்தது.** மொத்த அரச முதலீட்டில் சமூக பணிகள் துறையின் பங்கு 2006இல் 27 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. கல்வி மீதான முதலீடு முக்கியமாக மனிதவள அபிவிருத்திகளின் மீதும் பள்ளிக்கூட உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் மீதும் காணப்பட்டன. நலத்துறையின் முதலீடுகள் பொதுநலப்பணிகளின் மேம்பாடு மற்றும் வைத்திய காலப் பணிகளை வழங்குவதனையும் உயர்ந்த தொழில்நுட்ப மருத்துவ சாதனங்களை வழங்குவதனையும் நோக்கி நெறிப்படுத்தப்பட்டன.

**அட்டவணை 6.4 செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு**

| | 2005 | 2006 | | 2007 |
|---|---|---|---|---|
| | | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிக மானவை | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
| | | ரூபா மில்லியன் | | |
| **நடைமுறைச் செலவினம்** | **443,350** | **509,856** | **547,461** | **596,165** |
| அரச பொதுப் பணிகள் | 105,628 | 126,674 | 133,105 | 169,060 |
| உள்நாட்டு நிருவாகம் | 25,027 | 31,910 | 29,912 | 33,531 |
| பாதுகாப்பு | 61,498 | 71,663 | 81,243 | 100,286 |
| பொதுமக்கள் ஒழுங்குமற்றும் பாதுகாப்பு | 19,103 | 23,101 | 21,950 | 35,243 |
| சமூகப் பணிகள் | 188,651 | 175,158 | 204,635 | 202,900 |
| கல்வி | 50,697 | 58,350 | 61,144 | 65,503 |
| நலம் | 34,113 | 40,118 | 44,069 | 45,044 |
| நலன்புரி | 92,909 | 70,682 | 86,753 | 78,688 |
| சமூகப் பணிகள் | 10,933 | 6,008 | 12,669 | 13,665 |
| பொருளாதாரப் பணிகள் | 28,725 | 35,487 | 50,586 | 52,366 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் | 13,500 | 14,990 | 22,163 | 21,487 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 1,008 | 2,076 | 2,766 | 3,345 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 11,303 | 11,386 | 19,038 | 21,050 |
| ஏனையவை | 2,914 | 7,035 | 6,619 | 6,484 |
| ஏனையவை | 120,285 | 172,598 | 159,135 | 171,838 |
| இதில் வட்டி குறைச் செலவினம் | 120,159 | 151,239 | 150,777 | 169,122 |
| **மொத்த நடைமுறைச் செலவினம்** | 148,582 | 225,295 | 177,443 | 303,567 |
| அரச பொதுப் பணிகள் | 9,901 | 18,078 | 21,357 | 27,710 |
| உள்நாட்டு நிருவாகம் | 8,537 | 14,243 | 18,109 | 24,305 |
| பொதுமககள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு | 1,364 | 3,835 | 3,247 | 3,405 |
| சமூகப் பணிகள் | 35,992 | 44,740 | 48,375 | 66,606 |
| கல்வி | 12,860 | 13,275 | 17,188 | 23,209 |
| நலம் | 10,738 | 15,222 | 13,969 | 20,715 |
| நலன்புரி | 280 | 290 | 310 | 350 |
| வீடமைப்பு | 3,657 | 4,700 | 4,021 | 8,830 |
| சமூகப் பணிகள் | 8,457 | 11,253 | 12,887 | 13,502 |
| பொருளாதாரப் பணிகள் | 77,540 | 114,684 | 106,801 | 249,852 |
| வேளாணமை மற்றும் நீர்ப்பாசனம் | 10,041 | 12,821 | 12,434 | 19,989 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 19,234 | 31,525 | 26,376 | 73,873 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 31,765 | 46,557 | 37,988 | 111,430 |
| ஏனையவை | 16,500 | 23,771 | 30,003 | 44,560 |
| ஏனையவை | 25,152 | 47,795 | 912 | 900 |
| இதில் வட்டி குறைச் செலவினம் | | | | -41,500 |
| | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | |
| மொத்தச் செலவினம் | | | | |
| அரச பொதுப்பணிகள் | 4.9 | 5.3 | 5.5 | 6.1 |
| சமூகப் பணிகள் | 9.5 | 8.1 | 9.0 | 8.3 |
| பொருளாதாரப் பணிகள் | 4.5 | 5.5 | 5.6 | 9.3 |
| ஏனையவை | 6.1 | 8.1 | 5.7 | 5.3 |
| இதில் வட்டி குறைச் செலவினம் | 5.1 | 5.6 | 5.4 | 5.2 |
| **மொத்த செலவும் கடன் வழங்கலும்** | **25.0** | **27.0** | **25.9** | **27.8** |

(அ) 2005 உண்மைகள் மற்றும் 2006 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகளில் சுனாமியுடன் தொடர்புடைய செலவு உள்ளடக்கப்படுகிறது.

மூலம்: நிதி திட்டமிடல் அமைச்சு

## முக்கிய இறை நிலுவைகள்

**2006இல் திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை ரூ.235.8 பில்லியனாக விளங்கி மொ.உ.உற்பத்தியில் 8.4 சதவீதமாகக் காணப்பட்டது.** இது ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் திட்டமிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 9.1 சதவீதத்தினைவிடவும் குறைவாக காணப்பட்டது. இது மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க மூலதனச் செலவினத்திலும் தேறிய கடன் வழங்கலிலும் ஏற்பட்ட வீழ்ச்சி உயர்வாக இருந்தமையின் விளைவாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை (அரசின் குறைச்சேமிப்பு) 2005இன் 2.7 சதவீதத்திலிருந்து 2006இல் 2.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, மேம்பட்ட அரசிறையைக் காட்டிய போதும் மீண்டெழும் செலவினத்தில் பெரும் அதிகரிப்பொன்று காணப்பட்டது. அரசிறையால் ஏற்பட்ட அதிகரிப்பு வட்டியல்லா செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினை விஞ்சிக் காணப்பட்டமையினால் ஆரம்ப பற்றாக்குறை (வட்டிக் கொடுப்பனவுகளைக் கழித்த திரண்ட பற்றாக்குறை) 2005இன் 3.0 சதவீதத்திலிருந்து 2006இல் மொ.உ.உற்பத்தியின் 3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2006இல் வட்டியல்லா செலவினம் 21 சதவீதத்தால் அதிகரித்து இருந்த அதே வேளை மொத்த வருமானம் 26 சதவீதத்தால் அதிகரித்து இருந்தது.

## வரவு செலவுத்திட்ட குறையினை நிதியிடல்

**2006இல் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையான ரூ. 235.8 பில்லியனும் உள்நாட்டு முகவர்களினூடாகவே பெருமளவிற்கு நிதியிடப்பட்டது.** மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடல் ஆரம்ப இலக்கான ரூ.123 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.164 பில்லியனாகக் காணப்பட்ட வேளையில், தேறிய வெளிநாட்டு நிதியிடல் (ரூ.42 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டுக் கடன்களும் ரூ.30 பில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்பாடுகளும்) ஆரம்ப இலக்கான ரூ.124.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.72 பில்லியனாகக் காணப்பட்டது. தேறிய உள்நாட்டு நிதியிடல் உயர்வாக இருந்தமையானது அரசாங்கம் வங்கித்தொழில் முறையிலிருந்தான கடன்பாடுகளின் மீது கூடுதலாக தங்கியிருப்பதற்கு வழிவகுத்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, மொத்தத் தேறிய உள்நாட்டு நிதியிடல் 2005இன் 5.2 சதவீதத்திலிருந்து 5.8 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் 2005இன் மொ.உ.உற்பத்தியின் 3.4 சதவீதத்திலிருந்து 2.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2006இல் படுகடன் தங்கியிருப்பு விகிதம் (மொத்த அரச செலவினத்திற்கான மொத்த தேறிய கடன்பாடுகளின் விகிதம்) 2005இன் 29.3 சதவீதத்திலிருந்து 28.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**திரண்ட பற்றாக்குறையினை நிதியிடுவதில் தேறிய உள்நாட்டு நிதியிடலில் 51 சதவீதம் அல்லது ரூ.84 பில்லியன் (மொ.உ.உற்பத்தியில் 3 சதவீதம்) உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்து திரட்டப்பட்டது.** 2006இல் வங்கியல்லா மூலங்களிலிருந்தான மொத்த நிதியிடல் 2005இன் ரூ.93 மில்லியனிலிருந்து ரூ.9 பில்லியன் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. கடந்த ஆண்டுகளைப் போல் வங்கியல்லா நிதியிடலின் முக்கிய மூலமாக விளங்கும் ஊழியர் சேமநிதியம் விளங்கியது.

**வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசின் கடன்பாடுகள் தேறிய உள்நாட்டு நிதியிடலில் 49 சதவீதத்திற்கு வகை கூறின.** மொத்த வங்கிக் கடன்பாடுகள் 2005இன் ரூ.26.2 பில்லியனுடன் (மொ.உ.உற்பத்தியின் 1.1 சதவீதம்) ஒப்பிடுகையில் 2006இல் ரூ.80 பில்லியனாக (மொ.உ.உற்பத்தியில் 2.9 சதவீதம்) விளங்கியது. 2006இல்

**வரைபடம் 6.5 பற்றாக்குறையை நிதியிடல் (மொ.உ.உ. இன் சதவீதமாக)**



**வரைபடம் 6.6** வெளிநின்ற அரச படுகடன் (மொ.உ.உ. இன் சதவீதமாக)




மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகளிலிருந்தான கடன்பாடுகள் முறையே ரூ.39 பில்லியனாகவும் ரூ.41 பில்லியனாகவும் காணப்பட்டன.

**உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்களின் மீதான அழுத்தங்களை குறைப்பதற்கான வழிமுறையாகவும் வட்டி வீதங்களை குறைப்பதற்கு சாதனங்களை பன்முகப்படுத்தும் விதத்திலும் வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்காக வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கடன்பாடுகளில் அரசு தங்கியிருப்பது அதிகரித்து வருகிறது.** 2006இல் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் மொத்தப் பெறுமதி ஐ.அ.டொலர் 580 மில்லியனாக இருப்பதுடன் இப்பெறுகைகளில் ஒரு பகுதி முதிர்ச்சியடைந்த இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுமதியான ஐ.அ.டொலர் 250 மில்லியன் மீள்கொள்வனவிற்கும் பயன்படுத்தப்பட்டது. ஐ.அ.டொலர் 241 மில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுகளுடன் ஐ.அ.டொலர் 305 மில்லியன் கொண்ட கொடையினை கரை கடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து கடன்பட்டதன் மூலம் ஐ.அ.டொலர் 64 மில்லியன் கொண்ட தேறிய கடன்பாடு விளைவிக்கப்பட்டது. மேலும் 2006இல் கரைகடந்த வங்கித்தொழிலுக்கு வரவேண்டிய சில கடன்கள் மீண்டும் பயன்படுத்தப்பட்டன.

**படுகடன் சாதனங்கள் மூலமான தேறிய உள்நாட்டுக் கடன்பாடுகள் 2005இன் ரூ.74.5 பில்லியனிலிருந்து 2006இல் ரூ.128.2 பில்லியனிற்கு அதிகரித்தது.** ரூபாக் கடன்களில் மீள்கொடுப்பனவு (ரூ.23.8 பில்லியன்) காணப்பட்டமையினால், உள்நாட்டு படுகடன் சாதனங்களின் உள்நாட்டு நிதியிடலுக்கான தேறிய பங்களிப்பு முக்கியமாக திறைசேரி முறிகள் (ரூ.97.4 பில்லியன்) திறைசேரி உண்டியல் (ரூ.23.8 பில்லியன்) இலங்கை அபிவிருத்தி முறிகள் (ரூ.34.2 பில்லியன்) என்பவற்றிலிருந்து கிடைத்தன. வெளிநின்ற மேலதிகப் பற்றுக்களின் ஒரு பகுதியினை பிணையிடுவதற்காக இரு அரச வங்கிகளுக்கும் 2006இல் இரு தடவைகள் வழங்கப்பட்ட ரூ.16 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டமையானது படுகடன் சாதனத்திலிருந்தான தேறிய கடன்பாடுகள் அதிகரிப்பதற்கு பங்களித்தன.

**சாதனத்தினை அடிப்படையாகக் கொண்ட ரூபாக் கடன்பாடுகளின் முதிர்ச்சி அமைப்பு முதலீட்டாளர் முன்னுரிமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கூடியளவிற்கு சந்தையின் குறுங்காலம் சார்ந்ததாக இருந்தது.** உயர்ந்து செல்லும் பணவீக்கம் மற்றும் உயர்ந்த பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றினால் தூண்டப்பட்டு உயர்ந்து செல்லும் வட்டி வீத அமைப்பு குறிப்பாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற தன்மைகளுடன் இணைந்தமையானது முதலீட்டாளர் முன்னுரிமைச் சந்தையின் குறுங்காலத்திற்கு பெயர்வதற்கான முக்கிய காரணிகளாக விளங்கின.

**சாதனமல்லா மொத்தக் கடன்பாடுகள் 2005இன் ரூ.49.1 பில்லியனிலிருந்து 2006இல் ரூ.36 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.** இது, தற்காலிக முற்பணங்கள் (ரூ.9.2 பில்லியன்) மேலதிகப் பற்றுக்கள் (ரூ.23.7 பில்லியன் என்பன ஊடான கடன்பாடுகளையும் கரை கடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான கடன்பாடுகளையும் (ரூ.6.9 பில்லியன்) உள்ளடக்கியிருந்தது. மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடலில் சாதனமல்லா கடன்பாடுகள் 2005இன் 40 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006இல் 22 சதவீதமாகக் காணப்பட்டது.

**2006இல் வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்காகப் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன்கள் 29 சதவீதத்தினால் அதிகரித்தன.** மொத்த அடிப்படையில், அரசு முன்னைய ஆண்டின் ரூ.75.2 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 746.3 மில்லியன்) ஒப்பிடுகையில் வெளிநாட்டுக் கடன்களூடாக ரூ.97.6 பில்லியனை (ஐ.அ.டொலர் 912.5 மில்லியன்) பகிர்ந்தளிக்கக்கூடியதாக இருந்தது. யப்பான், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன தொடர்ந்தும் செயற்றிட்டக்கடன்களின் முக்கிய கடன் வழங்குநர்களாக விளங்கி மொத்த செயற்றிட்டக் கடன்களில் முறையே 38 சதவீதத்திற்கும் 14.3 சதவீதத்திற்கும் 20.3 சதவீதத்திற்கும் வகை கூறின. மொத்த உள்நாட்டு கடன்கள் ஐ.அ.டொலர் 150 மில்லியன் (ரூ.16 பில்லியன்) கொண்ட இரண்டு வெளிநாட்டுக் வர்த்தகக் கடன்களை உள்ளடக்கியிருந்தன. இவை உள்நாட்டுப் படுகடன் பிணையங்கள் சந்தையின் மீதான அழுத்தங்களைக் குறைப்பதனையும் உள்நாட்டு வட்டிவீத அமைப்பினை சமநிலைப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு கூட்டுக் கடனாக இவை 2006 நவெம்பரிலும் (ஐ.அ.டொலர் 50 மில்லியன்) திசெம்பரிலும் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) திரட்டப்பட்டன.

**2006இல் வெளிநாட்டுக்கடன்களூடான தேறிய நிதியிடல் வீழ்ச்சியடைந்தது.** தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் 2005இன் ரூ.47.8 பில்லியனிலிருந்து 2006இல் ரூ.41.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு வெளிநாட்டு கொடையாளர்களினால் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தின் கீழ் வெளிநாட்டுக் கடன் தீர்ப்பனவுகளில் ஒரு பகுதி பிற்போடப்பட்டமையின் விளைவாக 2005இல் பதிவு செய்யப்பட்ட ரூ.21.4 பில்லியன் கொண்ட குறைந்தளவு வெளிநாட்டுக்கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் 2006இல் ரூ.45.9 பில்லியன் கொண்ட உயர்ந்த வெளிநாட்டு கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் காணப்பட்டமையே காரணமாகும்.

**அட்டவணை 6.5** உள்நாட்டு நிதியிடல் மூலங்கள்

ரூபா. மில்லியன்

| | 2003 | 2004 | 2005 | 2006 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| கருவிகளின்படி | 79.7 | 117.2 | 123.6 | 163.8 |
| திறைசேரி முறிகள் | 137.1 | 156.6 | 108.1 | 97.4 |
| திறைசேரி உண்டியல்கள் | 14.9 | 25.0 | -9.4 | 20.3 |
| ரூபாக் கடன்கள் | -39.3 | -83.7 | -24.2 | -23.8 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | -15.2 | 16.4 | - | 34.3 |
| மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 0.2 | 3.6 | 4.9 | 9.2 |
| ஏனையவை | -18.1 | -0.7 | 44.2 | 26.4 |
| மூலங்களின்படி | 79.7 | 117.2 | 123.6 | 163.8 |
| வங்கி | -20.9 | 43.3 | 26.2 | 80.0 |
| வங்கியல்லா | 100.7 | 73.9 | 97.4 | 83.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி
நிதி திட்டமிடல் அமைச்சு

**அட்டவணை 6.6** மாகாண சபைகளுக்கான வரவு செலுத்திட்ட வெளிப்பாடு

ரூபா. மில்லியன்

| | 2003 | 2004 | 2005 | 2006 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| **மொத்த அரசிறை** | **11,625** | **13,522** | **16,132** | **19,481** |
| வரி வருவாய் | 9,968 | 11,544 | 13,818 | 16,586 |
| வரியல்லா வருவாய் | 1,656 | 1,978 | 2,314 | 2,895 |
| **மொத்தச் செலவினம்** | **49,224** | **56,964** | **73,009** | **94,470** |
| நடைமுறைச் செலவினம் | 39,800 | 46,308 | 59,132 | 76,428 |
| இதில்: தனியன் ஊதியம் | 30,582 | 36,079 | 46,479 | 60,497 |
| மூலதனச் செலவினம் | 9,423 | 10,656 | 13,877 | 18,042 |
| **மத்திய அரச மாற்றல்கள்** | **37,832** | **45,848** | **59,696** | **73,029** |
| திரட்டிய கொடைகள் | 30,462 | 35,892 | 47,107 | 62,342 |
| பிரமாணங்களை அடிப்படையாக்க கொண்ட கொடைகள் | 607 | 803 | 817 | 790 |
| பொருத்தப்பாட்டுக் கொடைகள் | 246 | 311 | 273 | 221 |
| மாகாணம் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகள் | 3,332 | 3,854 | 5,561 | 7,345 |
| சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டுக் கொடைகள் | 3,184 | 4,988 | 5,937 | 8,331 |

(அ) மாகாணம் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகள்

மூலங்கள்: உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**2006இல் பெறப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் 2005இன் ரூ.32.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.30.0 பில்லியனுக்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.** யப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற பல்புடை கடன் வழங்குனர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உணவு வேளாண்மை அமைப்பு என்பன முக்கியமான வெளிநாட்டுக் கொடை வழங்குனர்களாகக் காணப்பட்டன.

**வரவு செலவுத்திட்டம் பற்றாக்குறையை நிதியிடல் மோசமான பேரண்டப் பொருளாதார சிக்கல்களை கொண்டிருக்கக் கூடும்.** பற்றாக் குறை உள்நாட்டு மூலங்களினூடாக கூடுதலளவில் நிதியிடப்பட்டிருத்தால் அது தனியார் துறை முதலீட்டை இல்லாமல் செய்து விடும். உள்நாட்டு வங்கித் தொழில் முறைமையிலிருந்தான கடன் பாடுகள் பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தும். சலுகை ரீதியில் இல்லாத உயர் வெளிநாட்டுக் கடன்பாடுகள், பலதரப்பட்ட அதிர்வுகளுக்கு வெளிநாட்டுத் துறை பாதிப்புக்குள்ளாவதை அதிகரிக்கக் கூடும். எனவே, இப் பேரண்டப் பொருளாதாரச் சிக்கல்களைக் குறைப்பதற்கு வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையை நிதியிடுவதற்கு பல்வகைக் கடன்பாடுகளில் பொருத்தமான அளவு பேணப்படவேண்டும்.

## 6.4 துணைத் தேசிய அரசாங்க வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

**இலங்கையில் துணைத் தேசிய அரசாங்க வரவு செலவுத் திட்டமுறையானது மாகாண சபைகளையும் உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்குகிறது.** மாகாண சபைகளுக்கான அதிகார பகிர்வின் மூலம் தீர்மானங்களை மேற்கொள்கின்ற செயற்பாடுகளைப் பன்முகப்படுத்தும் செயற்பாடுகளின் அடிப்படையில் அரசியல் யாப்பிற்குச் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தின் கீழ் 9 மாகாண சபைகள் நிறுவப்பட்டுள்ளன. 2006இன் இறுதியில் உள்ளவாராக நாட்டில் உள்ளூராட்சி மன்ற முறையானது 18 மாநகர சபைகள், 40 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகள் உள்ளடக்கி மொத்தமாக 330 அலகுகளைக் கொண்டு விளங்குகின்றது.

**துணைத்தேசிய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட பணிகள் மேற்கொள்வதற்கு அவை பல்வேறு பிரச்சனைகளையும் எதிர்நோக்குகின்றன.** முக்கியமான பிரச்சனைகளாக மூலவளங்களை ஒதுக்கீடு செய்யும் நியதிகளில் அதிகாரப் பகிர்வின் அளவு வரையறுக்கப்பட்டுள்ளமை, மூலவளங்களைத் திரட்டுவதற்கான அதிகாரம் போதுமானதாக இல்லாமை, மாகாணங்களின் அரசிறைக்கும் செலவினத்திற்குமிடையிலான பாரிய இடைவெளியானது அத்தகைய மூலவள இடைவெளியினை நிதியிட மத்திய அரசாங்கத்திலிருந்தான மாற்றல்களில் பெருமளவிற்கு அதனை தங்கியிருக்கச் செய்வது, வலுவான நிறுவன ரீதியான கட்டமைப்பு போதுமானதாக இல்லாமையினால் மத்திய அரசாங்கத்துடனான உறவுமுறை பலயீனமாக காணப்படுவது தொழில்நுட்ப தேர்ச்சி போதாமை மற்றும் போதுமானதற்ற நிதியியல் மற்றும் மனிதவள முகாமைத்துவம் என்பன காணப்படுகின்றன.

**உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு துணை தேசிய அரசாங்கங்களுடன் தொடர்ந்தும் நெருக்கமான ஒத்துழைப்பினைப் பேணி வருகின்றது.** உள்ளூராட்சி மன்றங்கள் மாகாண சபைகள் அமைச்சு சிறந்த ஆளுகை, முகாமைத்துவ உதவிகளைப் பெறும் வழிவகைகளை ஊக்குவிப்பது. பணிகளின் வழங்கலை மேம்படுத்துவது மற்றும் துணைத் தேசிய அரசாங்கத்தின் அபிவிருத்தி குறிக்கோள்களை எய்துவது என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்கி வருகின்றது. அதேவேளையில் சுனாமி மீட்சி செயற்பாடுகளிலும் முக்கியமான பங்கினை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

**நிதி ஆணைக்குழு மாகாண சபைகளிடையே கிடைக்கத்தக்தாகவுள்ள மூலவளங்களை பகிர்வதில் அதன் முக்கியபங்கான விதந்துரைப்பை தொடர்ந்து செயற்படுத்தியது.** இச் செயல்முறையில், மாகாணங்களில் சமூக - பொருளாதார குறிகாட்டிகள் (ஒவ்வொரு மாகாணத்தின் குடித்தொகை மற்றும் ஒவ்வொரு மாகாணத்தின் மூலதன வருமானம் போன்றவை) மூலவளங்களைப் பகிர்வதற்கான பிரமாணமாக கருதப்பட்டன. நிதி ஆணைக்குழுவின் பங்கு பிரதேச பொருளாதார வேறுபாடுகளை எடுத்தியம்புவதற்கு பிரதேசத்திலுள்ள கிடைக்கத்தக்க மூலவளங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் கூடிய செயற்பாடு உடையதாக இருக்க வேண்டும்.

### மாகாண சபைகளின் செயலாற்றம்

**வரைபடம் 6.7** அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகள் (மொ.உ.உ. இன் சதவீதமாக)



**அட்டவணை 6.7 வெளிநின்ற மத்திய அரசதுறைப் படுகடன் (ஆண்டு முடிவில்)**

ரூபா. மில்லியன்

| | 2003 | 2004 | 2005 | 2006 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| 1. மத்திய அரச படுகடன் | 1,863,851 | 2,139,526 | 2,222,341 | 2,606,594 |
| **மொத்த உள்நாட்டுப் படுகடன்(அ)** | 1,019,969 | 1,143,389 | 1,265,721 | 1,475,520 |
| காலமுடிவின்படி | | | | |
| குறுகியகால | 249,621 | 269,784 | 262,153 | 314,868 |
| நடுத்தர மற்றும் நீண்டகால | 770,348 | 873,605 | 1,003,568 | 1,160,652 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கிகள்(ஆ) | 228,411 | 272,981 | 298,411 | 362,977 |
| வங்கியல்லாத்துறை | 791,559 | 870,408 | 967,310 | 1,112,442 |
| **வெளிநாட்டுப்படுகடன்** | 843,882 | 996,138 | 956,620 | 1,131,074 |
| வகைகளின்படி | | | | |
| சலுகைக் கடன்கள் | 822,839 | 970,299 | 919,030 | 1,045,346 |
| சலுகையற்ற கடன்கள் | 21,043 | 25,838 | 37,590 | 85,728 |
| நாணயத்தின்படி | | | | |
| சி.எ.உ | 359,844 | 420,459 | 401,615 | 465,679 |
| ஐ.அ.டொலர் | 134,538 | 152,562 | 161,632 | 188,228 |
| யப்பானிய யென் | 260,706 | 310,311 | 286,673 | 317,220 |
| யூரோ (இ) | 63,500 | 83,579 | 76,060 | 123,387 |
| ஏனையவை | 25,294 | 29,227 | 30,640 | 36,560 |
| வியக்கம் செலாவணிவீத வேறுபாடுகள் | 67,691 | 106,502 | -100,751 | 108,579 |
| **2. நிதியல்லா அரச கூட்டுத்தாபன படுகடன்** | 36,192 | 41,171 | 31,377 | 46,095 |
| இலங்கை மின்சார சபை | 14,411 | 12,529 | 9,841 | 10,329 |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்(இ) | 14,909 | 23,326 | 15,823 | 30,148 |
| கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் | 2,402 | 1,400 | 983 | 754 |
| ஏனையவை | 4,470 | 3,916 | 4,730 | 4,864 |
| **3. மொத்த அரசிறை படுகடன்** (1+ 2) | 1,900,043 | 2,180,697 | 2,253,718 | 2,652,689 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) முறையே 1993இலும் 1996இலும் வழங்கப்பட்ட ரூபா 24,088 மில்லியன் மற்றும் ரூபா 23,873 மில்லியன் கொண்ட நீண்ட கால முறிகளை உள்ளடக்குகின்றது.

(ஆ) வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநின்ற நிலுவைகள் 2003இல் ரூபா 29,406 மிலலியன் 2004 இறுதியில் ரூபா 31, 596 மில்லியன் 2005 இறுதியில் ரூ. 68, 247 மில்லியன் 2006இல் 83,297 மில்லியன்.

(இ) 2005இலும் 2006இலும் பொறுப்புக்கள் ரூ. 15.318 மில்லியன் மற்றும் ரூ. 12,925 மில்லியன்.

**2006இல் மாகாண சபைகளின் பொதுவான வரவு செலவுத்திட்ட செயலாற்றம் சிறிதளவால் மேம்பட்டது.** மொத்த புரள்வு வரிகள் மற்றும் முத்திரைத் தீர்வைகள் என்பனவற்றலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக மாகாண சபைகளின் அரசிறை அதிகரித்தது. மொத்த அரசிறையில் ஏறத்தாள 72 சதவீதம் இவ்விரு மூலங்களிலிருந்தே சேகரிக்கப்படுகிறது. மேல் மாகாணசபை முன்னணி அரசிறைச் சேகரிப்பு மாகாணமாக தொடர்ந்தும் விளங்கியதுடன் மொத்த அரசிறைக் சேகரிப்பில் 68 சதவீதத்திற்கு வகை கூறியது. இதற்கு வர்த்தக மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் உயர்ந்தளவில் குவிந்து காணப்படுவதும் இங்குள்ள உயர்ந்த குடித்தொகையுமே மேல் மாகாண சபையின் உயர்ந்த அரசிறைச் சேகரிப்பதற்கான காரணங்களாகும். மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாண சபைகள் ஏனைய முக்கிய அரசிறைச் சேகரிப்பு மாகாண சபைகளாக விளங்குகின்றன.

**மாகாண சபைகளின் அரசிறையிலும் பார்க்க அவற்றின் மீண்டெழும் செலவினம் குறிப்பிடத்தக்களவு உயர்வாக இருக்கின்றமைக்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாகும்.** மொத்த மீண்டெழும் செலவினத்தில் முக்கிய பங்கு (79 சதவீதம்) ஆளணியினருக்கான ஊதியங்களின் மீதே காணப்படுகிறது. கல்வி (69 சதவீதம்) நலத்துறை (21 சதவீதம்) ஆகிய துறைகள் ஆளணி ஊதியங்களில் பெரும் பங்கினை ஈர்த்துக் கொண்டுள்ளன.

**மாகாண சபைகளின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினால் உறப்பட்ட செலவினம் 2006இல் அதிகரித்துள்ளது.** முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமானது குறித்துரைக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி செயற்றிட்டங்களையும் வெளிநாட்டு நிதியிடலைக் கொண்ட சிறப்பு செயற்றிட்டங்களையும் உள்ளடக்கியிருந்தது. திரட்டிய கொடைகள் பிரமாண அடிப்படையிலான கொடைகள், சமப்படுத்தும் கொடைகள் மற்றும் மாகாணசபைகளுக்கான குறித்துரைக்கப்பட்ட கொடைகள் என்பனவற்றின் நியதிகளில் அமைந்த மாகாணசபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்கள் 2005இன் ரூ.54 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.71 பில்லியனிற்கு சிறிதளவால் அதிகரித்தன. சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டுக் கொடைகள் ரூ.2 பில்லியன்களாக விளங்கின.

**மாகாணசபைகள் அவற்றின் செயற்பாடுகளில் கூடிய செயற்பாடுவுடையதாக வருவதற்கான தேவை காணப்படுகிறது.** விசேடமாக, அவற்றின் மூலதன இடைவெளியை நிரப்புவதற்கு மத்திய அரசில் கூடியளவு தங்கியிருக்காது அவற்றின் சொந்த மூலவளங்களின் பயன்பாட்டை முன்னேற்ற வேண்டும். உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பலதரப்பட்ட ஏனைய மேம்பாடுகளுக்கான முதலீடுகளைக் கவர்வதற்கு அவற்றின் சொந்த முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளலாம்.

## உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றம்

**பல்வேறு தடைகள் காணப்பட்ட போதும் உள்ளூராட்சி மன்றங்கள் அவற்றிற்கு ஒப்படைக்கப்பட்ட தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன.** அவற்றின் தொழிற்பாடுகளுக்கு நிதியிடுவதற்காக அவற்றினால் பெறப்பட்ட பரவலாக்கப்பட்ட அரசிறையும் மத்திய அரசிலிருந்தான மாற்றல்களும் பயன்படுத்தப்பட்டன. அரசியல் யாப்பிற்கான 13ஆவது திருத்தத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டவாறு சொத்து மாற்றல் வரிகள், நீதிமன்ற தண்டப் பணம் போன்ற பரவலாக்கல் செய்யப்பட்ட சில அரசிறைகளைச் சேகரிப்பதில் மாகாணசபைகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான முகவர்களாகத் தொழிற்பட்டன. உள்ளூராட்சி மன்றங்களின் செலவினங்கள் ஆளணி ஊதியங்கள், ஏனைய நடைமுறைச் செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. உள்ளூராட்சி மன்றங்களின் காத்திரமான தொழிற்பாடுகள் நலிவுற்ற நிதியியல் முறைகள், வினைத்திறன்மிக்க மனிதவள முகாமைத்துவமுறை போதாமை, தகுதியான தொழில்நுட்ப அலுவலர்கள் போதாமை, வலுவான ஒழுங்கு விதிகள் மற்றும் கண்காணிப்பு முறைகளின் போதாமை போன்றவற்றினால் பாதிக்கப்பட்டன.

## 6.5 தெரிந்தெடுக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் நிதியியல் செயலாற்றம்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சபை என்பன தொடர்ந்தும் இரு அரச தொழில் முயற்சிகளாக இருந்துவருவதுடன் இன்னமும் அரசாங்கத்தின் இறைத்தொழிற்பாடுகளின் மீது குறிப்பிடத்தக்க சுமையை ஏற்படுத்தி வருவனவாகவுள்ளன.** 2006இல் இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் நிலைமை குறிப்பிடதக்க அளவு முன்னேற்றத்தினை வெளிகாட்டாத அதே நேரம் இலங்கை மின் சபையின் நிதியியல் நிலைமை மேலும் மோசமடைந்தது.

**2006இல் குறைந்த செலவினைக் கொண்ட நீர்மின்வலு உருவாக்கமும் தீர்வைச் சீர்திருத்தங்களும் அதிகரித்த போதும் இலங்கை மின்சபையின் நிதியியல் நிலைமை பல்வேறு காரணிகளினாலும் மோசமடைந்தது.** இவை நெகிழ்ச்சித்தன்மையற்ற விலையிடல் கொள்கை, அதிகரித்த எரிபொருள் செலவு, மின்வலுத்துறையின் திட்டமிடப்பட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தாமதம் திட்டமிடப்பட்ட குறைந்த செலவினைக் கொண்ட பாரிய அளவு வலுச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதம், மின்வலு முறைமையில் ஏற்படும் உயர் இழப்புக்களைக் கட்டுப்படுத்துவதில் காணப்பட்ட தாமதம் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இலங்கை மின்சபையால் தொடர்ந்தும் காணப்படும் தொழிற்பாட்டு இழப்புக்கள் வங்கித்தொழில் முறைக்கான அதன் பொறுப்புக்கள் அதிகரிப்பதற்கு வழிவகுத்து, வங்கித்தொழில் முறைமையின் மோசமான நாணயச் சிக்கல்களுக்கு வழிவகுக்கின்ற

**அட்டவணை 6.8 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

ரூபா. மில்லியன்

| | 2003 | 2004 | 2005 | 2006 தற்காலிகம் | 2007 மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 344,634 | 300,563 | 344,866 | 444,303 | 505.913 |
| கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் | 219,508 | 180,781 | 224,707 | 293,525 | 336,791 |
| உள்நாடு | 185,083 | 147,740 | 203,347 | 247,536 | 276,136 |
| வெளிநாடு | 34,425 | 33,041 | 21,360 | 45,989 | 60,655 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 125,126 | 119,782 | 120,159 | 150,778 | 169,122 |
| உள்நாடு | 113,540 | 105,878 | 113,164 | 133,788 | 147,973 |
| குறுங்காலம் | 25,147 | 20,474 | 20,300 | 24,558 | 28,885 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 88,393 | 85,404 | 92,864 | 109,230 | 119,088 |
| வெளிநாடு | 11,586 | 13,904 | 6,995 | 16,990 | 21,149 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதித்திட்டமிடல் அமைச்சு

வேளையில் மின்சபையின் அரசாங்கத்திற்கான கொடுப்பனவு நிலுவைகள் அதிகரித்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைகளுக்கு வழிவகுக்கும்.

**2006இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சாதகம் குன்றிய நிதியியல் நிலைமைகளுக்கு பல்வேறு காரணங்கள் காரணமாயிருந்தன.** இவை யூலையிலும் ஓகத்திலும் விலைச்சீராக்கங்களில் காணப்பட்ட தாமதங்கள் மற்றும் ஆண்டின் இறுதிப் பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பினால் ஏற்பட்ட தேறிய இழப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. எனினும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதன் நிதியியல் முகாமைத்துவத்தையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் தொடர்ந்தும் மேம்படுத்திய வேளையில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளை மிகப் போட்டித்தன்மைமிக்க அடிப்படையில் இறக்குமதி செய்ததுடன் நிரம்பலர் கொடுகடன் தொடர்பாக மிகச் சாதகமான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டது. மேலும் உறுதியான சில்லறை விலையினைப் பேணும் நோக்குடன் இது முதற் தடவையாக 2007இல் அதன் எண்ணெய் கொள்வனவின் ஒரு பகுதிக்கு காப்பீட்டு முறையினை மேற்கொண்டதுடன் சந்தைப் பங்குகளை உறுதிப்படுத்துவதற்காக எரிபொருள் அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2005இல் இந்திய தொடர்கொடுகடனின் கீழ் பெறப்பட்ட கொடுகடன் வசதியானது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் குறுங்காலப் பொறுப்புக்களை நடுத்தர காலத்திற்கும், நீண்ட காலப் பொறுப்புக்களுக்கும் பெயரச் செய்த போதும் உயர்ந்த குறுங்காலப் பொறுப்புக்கள் தொடர்ந்தும் கரிசனைக்குரியன வாகவே விளங்குகின்றன.

## 6.6 அரசதுறைப் படுகடனும் படுகடன் பணிக் கொடுப்பனவுகளும்

### அரச படுகடன்

**2006இல் அரச மொத்த வெளிநின்ற படுகடன் ரூ.2,606.5 பில்லியனிற்கு 17.3 சதவீதத்தினால் அதிகரித்த போதும் மொ.உ.உற்பத்திக்கான இதன் சதவீதம் 2005இன் 93.9 சதவீதத்திலிருந்து 2006இல் 93.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** மொ.உ.உற்பத்திக்கான குறைந்த படுகடன் விகிதத்திற்கு பெயரளவு மொ.உ.உற்பத்தியில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வளர்ச்சி காரணமாக இருந்தது. மொத்தப்படுகடனில் 56.7 சதவீதம் உள்நாட்டுப் படுகடனாக (ரூ.1,475.5 பில்லியன்) விளங்கிய வேளையில் 43.3 சதவீதம் வெளிநாட்டுப் படுகடனாக (ரூ.1,131.0 பில்லியன்) காணப்பட்டது. 2005இல் ஒப்பிடத்தக்க பங்குகள் முறையே 56.9 சதவீதமாகவும் 43.1 சதவீதமாகவும் காணப்பட்டன. முன்னைய ஆண்டின் முறையே 53.5 சதவீதத்துடனும் 40.4 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2006இல் மொ.உ.உற்பத்திக்கான உள்நாட்டுப்படுகடன் விகிதம் 52.6 சதவீதமாக இருந்த வேளையில் மொ.உ.உற்பத்திக்கான வெளிநாட்டுப் படுகடன் விகிதம் 40.4 சதவீதமாகக் காணப்பட்டது.

**பெயரளவு நியதிகளில் மொத்த வெளிநின்ற படுகடன் 2005இன் ரூ.82.8 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2006இல் ரூ.384.2 பில்லியனால் அதிகரித்தது.** மொத்த உள்நாட்டுப் படுகடன் ரூ.209.8 பில்லியனாலும் மொத்த வெளிநாட்டுப்படுகடன் 174.4 பில்லியனாலும் அதிகரித்தன. வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாக வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபா தேய்வடைந்தமையே முக்கிய காரணமாகும். 2006இல் செலாவணிவீத வேறுபாட்டின் தாக்கம் யாதெனில் வெளிநாட்டுப் படுகடன் ரூ.108 பில்லியனால் அதிகரித்தமையேயாகும். மாறாக, ரூபா உயர்வடைந்தமையின் காரணமாக 2005இல் வெளிநாட்டுப் படுகடன் ரூ.100.7 பில்லியனால் குறைவடைந்தது. உள்நாட்டுப் படுகடனால் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பிற்கு அதிகரித்த உள்நாட்டுக் கடன்பாடுகள் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் தொடர்பான செலாவணிவீத வேறுபாடுகள் மற்றும் 2006இல் வெளியிடப்பட்ட திறைசேரி முறிகளின் முகப்புப் பெறுமதிக்கும் ஏட்டுப் பெறுமதிக்குமிடையிலான அதிகரித்த வேறுபாடு என்பன காரணங்களாக அமைந்தன.

**மொத்த உள்நாட்டுப்படுகடனில் நடுத்தரகால மற்றும் நீண்டகால படுகடனின் பங்கு முன்னைய ஆண்டின் 79.3 சதவீதத்திலிருந்து 78.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** திறைசேரி முறைகளை முதன்மையாகக் கொண்ட வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியல் 2005இன் 59.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 60 சதவீதமாகக் காணப்பட்டது. சந்தைப்படுத்தலல்லாத படுகடனைத் தொடர்ச்சியாகக் குறைக்கின்ற கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2006இல் ரூ.23.8 பில்லியன் தொகை கொண்ட ரூபாப் பிணையங்கள் மீளச் செலுத்தப்பட்டன. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டுப்படுகடன் இருப்பில் ரூபாப் பிணையங்களின் பங்கு 2003இன் 24.3 சதவீதத்திலிருந்தும், 2004இன் 14 சதவீதத்திலிருந்தும், 2005இன் 11 சதவீதத்திலிருந்தும் 2006இல் 7.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. குறுங்கால கடன்பாடுகளின் பங்கு அதிகரித்தமையின் காரணமாக குறுங்கால உள்நாட்டுப்படுகடனில் திறைசேரி உண்டியலின் பங்கு 2005இன் 89 சதவீதத்திலிருந்து 2006இல் 81.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**2006இல் வங்கித்தொழில் துறைக்கான மொத்த வெளிநின்ற படுகடன் பொறுப்புக்கள் 21.6 சதவீதத்தினால் அதிகரித்தன.** மொத்த வெளிநின்ற உள்நாட்டுப் படுகடனின் சதவீதமாக, இது 2005இன் 23.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 24.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது மத்திய வங்கியின் 8 சதவீதத்தினையும் வர்த்தக வங்கிகளின் 16.6 சதவீதத்தினையும் உள்ளடக்கியுள்ளது. வர்த்தக வங்கிகளை முக்கியமான உதவுதொகையாளர்களைக் கொண்ட அரசின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற உள்நாட்டுப்படுகடன் 2005இன் ரூ.98.5 பில்லியனலிருந்து (ஐ.அ.டொலர் 965 மில்லியன்) 2006இல் ரூ.145 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 1,359 மில்லியன்) அதிகரித்தது. இது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான ரூ.83 பில்லியன் (ஐ.அ.டொலர் 779 மில்லியன்) கொண்ட கடன்பாடுகளையும் ரூ.62 பில்லியன் (ஐ.அ.டொலர் 580 மில்லியன்) கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது.

**வங்கியல்லாத் துறைக்கான மொத்தப் பொறுப்புக்களும் 15.0 சதவீதத்தினால் அதிகரித்தன.** வெளிநின்ற மொத்த உள்நாட்டுப்படுகடனின் சதவீதமாக, இப்பொறுப்புக்கள் 75.4 சதவீதத்திற்கு வகை கூறின. முக்கியமான பங்காளிப்பாளர்களாக ஊ.சே.நிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் விளங்கி முறையே வங்கியல்லாத்துறையின் படுகடன் மொத்தத்தில் முறையே 42 சதவீதத்திற்கும் (469 பில்லியன்) 15 சதவீதத்திற்கும் (ரூ.166 பில்லியன்) வகை கூறின.

**மொத்த வெளிநாட்டுப்படுகடனில் வெளிநின்ற வெளிநாட்டு சலுகை ரீதியான கடன்கள் 2005இன் 96.1 சதவீதத்திலிருந்து 2006இல் 92.4 சதவீதத்திற்கு**

**அட்டவணை 6.9 அரசின் படுகடன் குறிகாட்டிகள்**

| விடயம் | 2003 | 2004 | 2005 | 2006 தற்காலிகம் | 2007 மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| அரசின்படுகடன்/மொத்த உள்நாட்டு உற்பத்தி | 105.8 | 105.5 | 93.9 | 93.0 | 88.0 |
| உள்நாட்டுப்படுகடன் / மொத்த உள்நாட்டு உற்பத்தி | 57.9 | 56.4 | 53.5 | 52.7 | 50.6 |
| வெளிநாட்டுப்படுகடன்/மொத்த உள்நாட்டு உற்பத்தி | 47.9 | 49.1 | 40.4 | 40.4 | 37.4 |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன்/ஏற்றுமதிகள் (அ) | 133.7 | 134.9 | 120.7 | 127.7 | 117.4 |
| மொத்தப்படுகடன் பணிகள் / மொத்த உள்நாட்டு உற்பத்தி | 19.6 | 14.8 | 14.3 | 15.9 | 15.6 |
| மொத்தப்படுகடன் பணிகள்/ அரச அரசிறை (ஆ) | 124.6 | 96.5 | 91.0 | 93.1 | 84.3 |
| இதில்: உள்நாட்டுப்படுகடன் பணிகள் / அரச அரசிறை (இ) | 108.0 | 81.4 | 83.3 | 79.9 | 70.7 |
| மொத்தப்படுகடன் பணிகள் / அரச செலவினம் (இ) | 54.1 | 45.7 | 42.6 | 44.1 | 41.0 |
| உள்நாட்டுப்படுகடன் பணிகள் / அரச செலவினம் (இ) | 46.9 | 38.6 | 39.1 | 37.9 | 34.3 |
| வெளிநாட்டுப்படுகடன பணிகள் /ஏற்றுமதிகள் (அ) | 7.3 | 6.4 | 3.6 | 7.1 | 7.9 |
| உள்நாட்டு வட்டி / மொ.உ.உற்பத்தி | 6.4 | 5.2 | 4.8 | 4.8 | 4.6 |
| உள்நாட்டு வட்டி / அரச நடைமுறைச் செலவினம் | 33.9 | 27.2 | 25.5 | 24.1 | 24.5 |
| வெளிநாட்டு வட்டி / ஏற்றுமதிகள் (அ) | 1.8 | 1.9 | 0.9 | 1.9 | 2.0 |

(அ) பொருட்களினதும் பணிகளதும் ஏற்றுமதி
(ஆ) பொருளாதார வடிவமைப்பில் அரச வருமானம்
(இ) கடன்த் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை உள்ளடாக்கிய அரச செலவினம்
(ஈ) மூல மதிப்பீடு

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வீழ்ச்சியடைந்தது**. இவ்வீழ்ச்சிக்கு வெளிநாட்டு வர்த்தக் கடன்களினூடான அதிகரித்த கடன்பாடுகளே முக்கிய காரணமாகும். வெளிநின்ற இருபுடைக் கடன்பாடு 2005இன் ரூ.433.3 பில்லியனிலிருந்து 2006இல் ரூ. 508.8 பில்லியனிற்கு அதிகரித்தது. முக்கிய இருபுடைக் கடன் வழங்குநர்களாக யப்பான் (27.1 சதவீதம்), ஐக்கிய அமெரிக்கா (5.1 சதவீதம்) சேர்மனி கூட்டாட்சிக்குடியரசு (7.7 சதவீதம்) என்பன விளங்கின. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பன முக்கிய பல்புடை கடன் வழங்குநர்களாக விளங்கி இவை வெளிநாட்டுப்படுகடனில் முறையே 23.9 சதவீதத்திற்கும் 21.6 சதவீதத்திற்கும் வகை கூறின.

**மொ.உ.உற்பத்தி விகிதத்திற்கான அரச படுகடன் கடந்த அண்மைக் காலத்தில் சில முன்னேற்றங்களைக் காட்டிய போதும் இன்னமும் உயர்வாகவே இருக்கிறது**. உயர்ந்த வெளிநின்ற படுகடனுடன் உயர்ந்த வட்டிவீதக் கொடுப்பனவுகளும் சேர்ந்து இறைத்தொழிற்பாடுகளைச் சுதந்திரமாக கையாள்வதற்கு வரையறுக்கப்பட்ட தன்மைகளை மட்டுமே வழங்குவதன் மூலம் வட்டியல்லா வரவு செலவுத்திட்ட செலவினத்தின் மீது அழுத்தங்களை அதிகரிக்கின்ற வேளையில் அபிவிருத்தி சார்ந்த செலவினங்களையும் குறைக்கின்றது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டின் மீதான மோசமான தாக்கங்கள் மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளை எதிர்த்து நிற்கும் நாட்டின் ஆற்றலில் வீழ்ச்சி என்பன உயர்படுகடன் சுமையினால் ஏற்படும் எதிர்க்கணியத்தாக்கங்களில் சிலவாகும். இச்சூழ்நிலையானது, அரசாங்கத்தின் கொள்கை ஆவணத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்ற படுகடன் குறைந்த பாதையினை அடைவதற்கான இறைத்திரட்சி செயற்பாட்டினை வலுப்படுத்தும் விதத்தில் முயற்சிகளை நடுத்தரகாலத்திலிருந்து நீண்ட காலத்தினை நோக்கி தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்துகின்றது.

## நிதியல்லா அரச கூட்டுத்தாபனங்களின் படுகடன்

**நிதியல்லா அரச கூட்டுத்தாபனங்களின் வங்கித்தொழில் முறைக்கான மொத்த வெளிநின்ற பொறுப்புக்களும் அவற்றின் நீண்ட கால வெளிநாட்டுப் பொறுப்புக்களும் 2006இல் ரூ.14.7 பில்லியனால் அதிகரித்தன.** இப்பொறுப்புக்களின் மொத்தம் முறையே ஆண்டின் ரூ.31.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2006இன் இறுதியில் ரூ.46.1 பில்லியனாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் முறைமைக்கான நிதியல்லா அரச கூட்டுத்தாபனங்களின் படுகடன் பொறுப்புக்கள் 2005இன் ரூ.16.7 பில்லியனிலிருந்து 2006இல் ரூ.33.2 பில்லியனுக்கு அதிகரித்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் மின்சபையும் முக்கிய படுகடனாளர்களாக விளங்கியதுடன் வங்கித்தொழில் முறைமைக்கான மொத்த வெளிநின்ற பொறுப்புக்கள் 83 சதவீதத்திற்கு வகைகூறி முறையே ரூ.17.2 பில்லியனாகவும் ரூ.10.3 பில்லியனாகவும் காணப்பட்டன. நிதியல்லா அரசகூட்டுதாபனங்களின் மொத்த வெளிநின்ற படுகடன் 2005இல் இந்தியாவிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தபானம் பெற்ற தொடர்க்கொடுகடனின் எஞ்சிய ரூ.12.9 பில்லியன் (ஐ.அ.டொலர் 120 மில்லியன்) கொண்ட நிலுவையினையும் உள்ளடக்கியுள்ளது.

## அரசதுறைப் படுகடன்

**2006 இறுதியில் அரச படுபடன் இருப்புக்களையும் வங்கித்தொழில் முறைக்கான நிதியல்லா அரச கூட்டுத்தாபனங்களின் பொறுப்புக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநின்ற அரசதுறைப்படுகடன் ரூ.394.3 பில்லியனால் ரூ.2,648 பில்லியனிற்கு அதிகரித்தது.** ரூ.379.6 பில்லியனால் அதிகரித்த அரசபடுகடனும் ரூ.12.8 பில்லியனால் அதிகரித்த நிதியல்லா அரசகூட்டுத்தாபனங்களினது படுகடன்களும் இவ்வதிகரிப்பிற்கு பங்களித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிநின்ற அரசதுறைப் படுகடன் 2005இன் 95.3 சதவீதத்திலிருந்து 2006இல் 94.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

## படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

2006இல் மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ரூ.444.3 பில்லியனிற்கு 28.8 சதவீதத்தினால் அதிகரித்தன. **இது கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவான ரூ.293.5 பில்லியனையும் (66 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவான ரூ.150.8 பில்லியனையும் (34 சதவீதம்) உள்ளடங்கியிருந்தது. உள்நாட்டு மூலங்களுக்கான படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ரூ.381.3 பில்லியனாக இருந்த வேளையில் வெளிநாட்டு மூலங்களுக்கான அத்தகைய கொடுப்பனவுகள் ரூ.63 பில்லியனாக விளங்கின. வெளிநாட்டுக் கொடை வழங்குனர்களினால் 2005இற்காக வழங்கப்பட்ட படுகடன் இசைவுத்தாக்கத்தின் காரணமாக கொடுப்பனவில் ஒரே நேரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சித்தன்மை 2005 நவெம்பரில் முடிவடைந்தமையின் காரணமாக 2006இல் கிரமமான வெளிநாட்டுப் படுகடன் பணி நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, 2006இன் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் வெளிநாட்டு வட்டியின் ஒரு பகுதியினையும் 2005இல் பிற்போடப்பட்ட மீள்கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தது.**

**படுகடனை தாமதித்துச் செலுத்துவதற்கான சட்ட இசைவுத் தாமதம் முடிவடைந்தமையின் காரணமாக 2006இல் படுகடன் பணிக் குறிகாட்டிகள் முன்னைய மட்டங்களுக்கு மாற்றமடைந்தன**. இருந்த போதும், அரசிறை மற்றும் செலவிற்கான மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகள், பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிக்கான வெளிநாட்டுப்படுகடன் பணிக்கொடுப்பனவுகள் என்பனவற்றினை உள்ளடக்கிய படுகடன் பணிக்கொடுப்பனவுகள் சுனாமிக்கு முன்னைய மட்டங்களுடன் ஒப்பிடுகையில் மேம்பாடடைந்தன.

**வருங்கால படுகடன் முகாமைத்துவக் கொள்கை பல காரணிகளைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட வேண்டும்.** முதிர்ச்சிகளை ஒன்று சேர்த்தல் பொருத்தமான பொறிமுறை மூலம் ஆகக் குறைந்தளவுக்கு கொண்டு வரப்படவேண்டும். இது உள்நாட்டுப் படுகடனின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டை சுமூகமாக்குவதற்கு உதவுவதன் மூலம் அரச இறைத் தொழிற்பாடுகளிலான அழுத்தத்தை மிகவும் குறைக்கிறது. இத்துடன் படுகடன் பிணையங்கள் சந்தையை விருத்தி செய்வதற்கு நீண்டகால விளைவு வளை ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும்.